979

# மாத்வமித்திரன்

# The Madhwa Mitran.

Editor, Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.

| | | |
|---|---|---|
| Vol. 5 | ஆங்கீரஸ ஸம்வத்ஸரம் மாக மாஸம் | No 7 |
| புஸ்தகம் 5 | பௌர்ணமி (10—2—33.) | கே 7 |

| ஸ. | பொருளடக்கம். | பக்கம் |
|---|---|---|
| 1. | கும்பகோணத்தின் மஹாத்மியம் | 193 |
| 2. | ஜயதீர்த்தாதிகள் தேவாம்சமே. (ஸ்ரீமான் கர்பே. ஸ்ரீனிவாஸாசாரியார் B.A.,) | 209 |
| 3. | கும்பகோண ஆலய்தீர்த்த வழிகாட்டி. | 213 |
| 4. | காடக உபநிஷத் | 215 |
| 5. | ஸ்ரீ தாத்பர்ய நிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்) | 217 |
| 6. | செய்தித்திரட்டு | 221 |
| 7. | மதிப்புரை, விசேஷ தினங்கள். | 224 |

15 F[illegible]

ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹாய ந

# மாத்வமித்திரன்

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत् , तत्वतः भेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

## கும்பகோணத்தின் மகாத்மியம்.

(முன் தொடர்ச்சி.)

1. ஸ்ரீமங்களநாயகி ஸமேத ஆதிகும்பேசுவரர். 2. ஸோமநாயகி ஸமேத ஸோமேசுவரர். 3. பிருஹந்நாயகி ஸமேத நாகேசுவரர். 4. விசாலாக்ஷிஸமேத காசி விசுவேசுவரர். 5. ஸ[illegible]தாவல்லி ஸமேத அபிமுகேசுவரர். 6. ஸௌந்தர்யநாயகி ஸமேத கௌதமேசுவரர். 7. ஆனந்தநிதிதேவி ஸமேத ஆதி விசுவேசுவரர் (கம்பட்ட விசுவநாதர்.) 8. ஸோமகலாம்பா ஸமேத பாணபுரீசுவரர். 9. கோமளவல்லி ஸமேத சாரங்கபாணி. 10. பாதாள வெங்கடரமணன். 11. விஜயவல்லி ஸமேத சக்ரபாணி. 12. லக்ஷ்மி நரஸிம்ஹர். 13. பூவராஹர். 14. லக்ஷ்மி நாராயணர். 15. பிருஹத்தேவி ஸமேத வரதராஜர் (மேலக்காவேரி.) 16. தசாவதார மூர்த்திகள். 17. சரநாராயணர். 18. பிரம்மா. 19. நவகன்னிகைகள். 20. வேதநாராயணர். 21. யோக நரஸிம்ஹர். பிந்தி ஏற்பட்டவர்களாவன:— 22. ராமர் (கடைத்தெரு.) 23. கோபாலன் (கடைத்தெரு) 24. வரதராஜன் (தோப்புத்தெரு) 25. கைலாஸநாதர். 26. காளாஸ்தீசுவரர். 27. கரும்பாயிர விநயகர். 28. மகாமகதீர்த்த பாகர்களான பிரம்மதீர்த்தேசுவரர். 29. முகுந்தேசுவரர். 30. தனேசுவரர். 31. விருஷபேசுவரர். 32. பரணேசுவரர். 33. கோணேசுவரர். 34. பக்திகேசுவரர். 35. பைரவேசுவரர். 36. அகஸ்தீசுவரர். 37. வியாஸேசுவரர். 38. உமாபாகேசுவரர். 39. நைருதீசுவரர். 40. பிரம்மேசுவரர். 41.

சங்காதரேசுவரர். 42. முக்ததீர்த்தேசுவர். 43. க்ஷேத்ரபாலேசுவரர். 44 புகா[ர்]த பிள்ளையார் முதலியவர்களும் ஸ்ரீவியாஸராஜர் [ப்ரதிஷ்டை] செய்த வீராஞ்ஜனேயர் (மங்களநாயகி ஸன்னதி) ஸ்ரீ விஜயீந்திரர் ப்ரதிஷ்டைசெய்த ஸ்ரீநரஸிம்ஹர். (இங்கு அவர் தன் கையால் தயாரித்து பூஜித்துவந்த 104 அற்புத பகவன் மூர்த்திகள்) பாண்டுரங்கன், பட்டாபிராமன், வாஸுதேவ மூர்த்தி, விசுவநாதர், ஏகாம்பரேசுவரர், குமரஸ்வாமி, உச்சிப் பிள்ளையார் முதலிய பல பிள்ளையார்கள் பல ஹனுமார்களிருக்கின்றனர். பாஷியகாரரின் ஸன்னதி, தேசிகரின் ஸன்னதி, கூறத்தாழ்வார் ஸன்னதி, திருமகிஷி ஆழ்வார் மற்றும் பல ஆழ்வார்களின் ஸந்நதி, காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீசங்கராசாரியாரின் தலைமை மடம், ஸ்ரீவிஜயீந்திரரின் பிருந்தாவனங்கள், வியாஸராஜமடத்து பாஷியதீபிகாசாரியார் (ஜகந்நாததீர்த்தர்) வித்யாநாததீர்த்தர், வித்யாபதிதீர்த்தர் இவர்களின் பிருந்தாவனங்கள், சைவ மதத்து (லிங்காயதர்களுடைய) வீரபத்திரஸ்வாமி, ஜைனர்களின் திகம்பரேசுவரர் முதலியவர்களின் எண்ணிறைந்த கோயில்களிருக்கின்றன. இங்குள்ள புண்யதீர்த்தங்களாவன:— மகாமகஸரோவரத்தில் 1. நவகன்யாதீர்த்தம். 2. இந்திரதீர்த்தம். 3. அக்னிதீர்த்தம். 4. யமதீர்த்தம். 5. நிருதிதீர்த்தம். 6. வருணதீர்த்தம். 7. வாயுதீர்த்தம். 8. குபேரதீர்த்தம். 9. ஈசான்யதீர்த்தம். 10 ப்ரம்மதீர்த்தம். 11. கங்காதீர்த்தம். 12. யமுனாதீர்த்தம். 13. நர்மதா தீர்த்தம். 14. ஸரஸ்வதிதீர்த்தம். 15. கோதாவரிதீர்த்தம். 16. காவேரி தீர்த்தம். 17. கன்யாதீர்த்தம். 18. க்ஷீரநதி (பயோஷ்ணி தீர்த்தம்) 19. ஸரயூதீர்த்தம். 20. நடுவில் 66 கோடி தீர்த்தங்கள். 21. கௌதமதீர்த்தம் (கௌதமேசுவரர் கோவில்) 22. நாகதீர்த்தம் (நாகேசுவரர் கோயில் கேணி) 23. ப்ரம்மதீர்த்தம் (அரிசொல்லாறு) 24. ஸோமதீர்த்தம். (ஸோமேசுவரர் எதிரில்) 25. பாதாளகங்கை (ஸோமேசுவரர் கோயில் கிணர்) 26. ஹேமபுஷ்கரணி (பொற்றாமரை) 27. வருண தீர்த்தம் (அரசலாறு பேட்டைத்தெரு) 28. வராஹதீர்த்தம். 29. காசியபதீர்த்தம் (ஸ்ரீவிஜயீந்திரஸ்வாமிகள் மடம்) 30. கதா தீர்த்தம் (மேலக்காவேரி வரதர் கோவில்) 31. சக்ரதீர்த்தம். (கா



வேரி சக்ரபடித்துறை) 32. ஈசானதீர்த்தம் (காவேரி பகவத் படித்துறை) 33. இந்திரதீர்த்தம் (பச்சையப்பன் குளம்) 34. வ்யாஸதீர்த்தம் (பாணாதுறை கோயில் எதிரில்) 35. ஸுதாதீர்த்தம் (கும்பேசுவராலயம்) 36. சூரியதீர்த்தம் நாகேஸ்வரர் தெற்கு வீதி.) 37. வருணதீர்த்தம் (அரிசொல்லாறு.)

ஸ்ரீசாரங்கபாணியின் வரலாறு:- கௌதமருடைய பாதப்ரஹாரத்தை ஏற்றுக்கொண்டு, தன்னை அலக்ஷியம் செய்ததாய் லீலார்த்தமாய் மகாலட்சுமி அனந்தசயனத்தில் ஸ்ரீபத்மநாபனுடன் சண்டையிட்டு கொல்லாபுரம் ஓடிப்போக, ஸ்ரீநாராயணன் வைகுண்டத்திலிருந்து வெங்கடாசலம் வந்து நீலாதேவியின் அம்சமான பத்மாவதியை விவாகம் செய்துகொண்டார். தக்ஷிணதேசத்து ஜனங்களை உத்தரிப்பதற்காக நாரதர் கொல்லாபுரம்போய் இளையாளான பத்மாவதியை பகவான் மணந்து ஆனந்தமாய் திருப்பதி மலையில் இருக்கப்போவதாய் அறிவிக்க, மகாலட்சுமி கோபங்கொண்டு உடனே ஹம்ஸாரூடளாய் புறப்படவும், நாரதர் வெங்கடேசனிடம் ஓடிவந்து, மகாலட்சுமி கோபத்துடன் வருவதாய் அறிவிக்கவும், ஸ்ரீவெங்கடேசன் திருப்பதிமலையின் அடிவாரத்தில் காட்டின் நடுவில் ஓர் தனி இடத்தில் பத்மாவதியை கோயில் கட்டி பந்தோபஸ்துசெய்துவிட்டு, மலையிலிருந்து ஓர் அம்சத்துடன் இந்த கும்பகோண க்ஷேத்திரத்திற்கு ஓடிவந்து, ஓர் பெரிய குகையில் அநேக ஆயிரம் வருடம் பதுங்கினார். ஸ்ரீவெங்கடேசன் ஸ்ரீ சாரங்கபாணிஸ்வாமி கோவிலில் பாதாள வேங்கடரமணனென இன்னமும் சேர்வைசாதித்துவருகிறார். மகாலட்சுமி பின்னே ஓடிவரவும், கும்பகோணத்து எல்லைக்குள் வந்தவுடன் அவளுடைய கோபம் மாறி ஸௌம்யபாவமேற்பட்டு, பகவத் தரிசனமேற்பட இங்கே தவத்திலிருந்தாள். பொன்மயமான தாமரைகளுள்ள ஹேம புஷ்கரணியை மனதால் நிர்மாணம் செய்தாள். ஸ்ரீஹரியை காலாலுதைத்தேனே என்று பிருகுமுனி பச்சாத்தாபமடைந்து மகாதவம்புரிந்து ஸ்ரீராமபக்தனை குஹனாகவும், பிறகு மகாலட்சுமி பக்தனை காவீராஜனையும் பிறந்து, பிறகு மேரு மலை சமீபத்தில் பதினாலாயிரம் சிஷ்யர்களைக்கொண்ட ஹேம ரிஷியாயும் பிறந்தார். ஸ்ரீஹரியை மாப்பிள்ளையாகவும் மகாலட்சு

மியைப் பெண்ணாகவும் பெற்று ஸாயுஜ்ய முக்தியையடையவேண்டுமென்று பத்தாயிரம் வருடம் அவர் தவம் செய்ய, பகவான் இந்த கும்பகோண க்ஷேத்திரத்திற்குச் சென்றால் அவருடைய அபீஷ்டம் பூர்த்தியாகுமென்று அறிவித்தார். அதன்படி ஹேமரிஷி இங்குவந்து ஹேமாப்ஜ ஸரஸ்தீரத்தில் தவம் செய்திருந்த மகாலட்சுமியை தன் புத்ரியாக்கிக்கொண்டு, அவளுக்கு கோமளவல்லி என்று நாமகரணமிட்டு, பகவத் தரிசனமுண்டாக அவளுடன் ஆயிரம் வருடம் இங்கு கடுந்தவம் புரிய, வெங்கடரமணன் சாரங்கபாணியாய் ஸோமச்சந்தமென்ற விமானத்திலேறிக்கொண்டு ஸேர்வைஸாதித்து மாலட்சுமியை முன்போல் ஹிருதயத்தில் சேர்த்துக்கொண்டார். முன்பு சூரியனும் சதுர்முகனும், தங்கள் தினம் ஸ்வாமி பூஜைக்காக விமானத்திலேறிய பகவன் மூர்த்திகள் வேண்டுமென்று ஸ்ரீஹரியைக்குறித்து தவம்செய்ய, பகவான் மூன்று விமானங்களை நிர்மாணம் செய்து, ஒன்றை வைகுண்டத்தில் தனக்காக வைத்துக்கொண்டு, முப்பத்திமுக்கோடி தேவர்களுடனுள்ள தன் ரூபங்களுடன்கூடிய மற்ற இரண்டு விமானங்களில் ஸ்ரீரங்க விமானத்தை பிரம்மாவுக்கும், அமலஸம்ஸ்தானமெனப்படும் ஸோமச்சந்த விமானத்தை சூரியனுக்கும் கொடுத்தார். அவர்கள் வெகுகாலம் பூஜை செய்து அவர்களின் மூலமாய் அவ்விரண்டும் இக்ஷ்வாகு ராஜனுக்கு கிடைத்து, இக்ஷ்வாகுராஜன் பூஜை செய்துவரும்பொழுது இரண்டு விமானங்களுமொன்றாகி, இக்ஷ்வாகு பரம்பரையில் ஸ்ரீராமச்சந்திர மூர்த்திக்குக்கிடைத்து பிறகு விபீஷணரால் ஸ்ரீசந்திர புஷ்கரணி தீரத்தில் ஸ்ரீரங்க விமானம் நிலைநின்றது. ஹேமரிஷி கும்பகோணத்தில் தவம் செய்திருக்கவும் ஸ்ரீரங்கவிமானத்திலிருந்து அமலஸம்ஸ்தான விமானம் தனியாய் மீண்டும் வெளிவர, பகவான் ஸ்ரீரங்கனாதன் காலநேமி முதலானவர்களைக் கொன்ற சார்ங்கமென்ற தனுஸ்ஸை எடுத்துக்கொண்டு சாரங்கபாணியாய் சேஷசாயியாய் கும்பகோணம் வந்து மகரஸங்கிரமணத்தன்று விருஷபலக்னத்தில் அவருக்கு ப்ரத்யக்ஷமானார். உத்தராயண தக்ஷிணாயன தேவதைகள் தங்கள் புண்யம் ஸமமாயிருக்கவேண்டுமென்று தவம் செய்து இந்த விமானத்திற்கு இரண்டு த்வாரங்களாய் நின்று



ஸமானமான புண்யத்தை அடைகின்றனர். ஹேமபுஷ்கரணியில் சந்திரகிரஹணம், சூரியகிரஹணம், மகரஸங்க்ரமணம் முதலான காலங்களில் ஸ்நானம் மகா விசேஷம். விதர்மனென்ற பிராம்மணன் தன் இளைய தாயாரான கர்கசி என்பவளுடன் சுகித்திருந்த தோஷத்தால் மகா குச்சிதமான பலவகை ஜன்மங்களைப்பெற்று முடிவில் கர்கசி காகமாகவும், விதர்மன் ஸர்வாங்க குஷ்டரோகியாயும் கும்பகோணத்தில் பிறந்து, இந்த ஹேமபுஷ்கரணில் ஸ்நானம் செய்து முக்தியையடைந்தனர். சந்திரன் குருபத்னியான தாரையின் ஸங்கமம் செய்ததால் க்ஷயரோகமடைந்து இதில் ஸ்நானம் செய்து ரோக நிவிருத்தியாகி ஸோமநாதருடைய தலையிலிருந்துகொண்டு ஸ்ரீசாரங்கபாணி ஸமீபத்தில் வசிக்கிறான். பக்தர்கள் ஸ்ரீசாரங்கபாணியை எவ்வளவு நேரம் பார்த்தாலும் திருப்தி ஏற்படுத்துவதில்லையாதலால் இவர் அபர்யாப்தாமிருதர் (ஆராவமுதர்) என்று சொல்லப்படுகிறார். இவரைப்போன்ற லாவண்ய மூர்த்தியை நான் இந்த பரதநாட்டில் எங்கும் காணவில்லை என்று ஸ்ரீவாதிராஜர் சொல்லியுள்ளார்.

**ஸ்ரீசக்ரபாணிஸ்வாமி:**— சூரியன் தான் ஆயிரம் கிரணம் கொண்டவனென்ற கர்வத்தால் தன் முழு பிரகாசத்துடன் பிரகாசிக்க இங்கு காவேரியில் சக்ரதீர்த்தத்திலிருந்து பகவானுடைய சக்கரம் வெளிவந்து போட்டி போட்டுக்கொண்டு அதைவிட அதிகமாய் ப்ரகாசித்து உலகம் சங்கடப்படவும், தேவகணங்களால் ப்ரார்த்திக்கப்பட்ட ஸ்ரீஹரியின் சக்கரம், சாந்தமாகி சூரியனுடைய எல்லா ஒளியையும் இழுத்து விடவும், உலகில் இருளடைந்துவிட்டது. சூரியன் பகவானைக்குறித்து தன் பிரகாசம் ஏற்பட கடும்தவம் புரிந்தான். ஸ்ரீசாரங்கபாணியே சுயம் அஷ்டமகா புஜங்களுடன் தன் சக்ரத்தில் சக்ரபாணியாய் தோன்றி சூரியனுக்கு அருள்புரிந்தார். மார்க்கண்டேயர் இவரை ஆராதித்து சிரஞ்ஜீவியானார். ஆகவே இது பாஸ்கரக்ஷேத்ரமெனப்படுகிறது. சதுர்முகன் இங்கு யக்ஞங்களைச்செய்து அவபிருதஸ்நானம் செய்யும்பொழுது முன்னம் பாதாளத்தில் ஜலந்தரன் முதலான அஸுரர்களைக்கொன்ற பகவானுடைய சக்ராயுதம் பாதாளத்திலிருந்து இந்த தீர்த்தத்தின் வழியாய் வெளிவந்து சதுர்முகனின் எதிரில்

வரவும் அதை பிரம்மா பூஜித்து அந்த தீர்த்தத்திலேயே ஸ்தாபித்தார். ஆதலால் இது சக்ரதீர்த்தமெனப்படுகிறது. இதன் கரையில் பிரம்மா ஸ்தாபித்த அசுவத்த விருக்ஷமிருக்கிறது. சக்ரதீர்த்தத்தில் அகமர்ஷண ஸ்நானமும், அதன் கரையில் பித்ருக்களுக்கு ச்ராத்தம் சரமகிரியைகள் முதலியவைகளும் மகத்தான பலனைத்தரும். சக்ரதீர்த்தத்தில் பித்ருக்களின் அஸ்தியைப் போட்டால் அது கரைந்து பித்ருக்கள் முக்தியையடைவார்கள். முன்பு பாவனனென்ற பிராம்மணன் அவனுடைய தந்தையின் எலும்புக்களை கங்கைக்கு கொண்டுபோயும் அவை அங்கு யாதொரு மாறுதலை அடையாமல் கும்பகோணம் சக்ரதீர்த்தத்தில் புஷ்பங்களாய் மாறியதைக் கண்ணுற்று காசியைவிட இதே உத்தமமான க்ஷேத்திரமென்று அசரீரவாணி மூலமாயுமறிந்து கங்காதீரத்திலிருந்து இவ்வூருக்கே வந்து, பித்ருகாரியங்களை சக்ரதீர்த்தக் கரையில் நடத்தியுள்ளார். ஆகவே பெரியோர்கள் கும்பகோணம் சக்ரதீர்த்தக்கரையில் மரணத்தை அபேக்ஷிப்பார்கள். இந்த ஸ்மசானமும், மைசூர் மகாராஜாவால் கட்டப்பட்டிருக்கும் சரமகிருத்ய சாவடியுமிருந்துவருகிறது. ஸ்ரீ சக்கரபாணி தேவாலயத்தில் லக்ஷ்மீநரஸிம்ஹர் தக்ஷிணாபிமுகமாய் எழுந்தருளியிருக்கிறார். பூத ப்ரேதபிசாசாதிகள், சக்ரபாணி, நரஸிம்ஹர் இவர்களை தரிசித்தமாத்திரத்தில் ஓடுவதுடன் எழுநாள் ப்ரதக்ஷிண நமஸ்காராதிகளைச் செய்தால் ஸர்வபீஷ்டங்களுமுண்டாகின்றன.

**ஸ்ரீபூவராஹர்:-** தேவர்களை ஹிம்ஸித்து பூமியை பாதாளத்திற்கு திருடிச்சென்ற ஹிரண்யாக்ஷனை ஸ்ரீ வராகமூர்த்தி ஸம்ஹரித்து பூமியை தன் கடைவாய் பல்லின்மீது தூக்கிக்கொண்டு பாதாளத்திலிருந்து இங்குள்ள வராஹதீர்த்தத்தின் வழியாய் மேலே வந்து பாடலீ விருக்ஷத்தினடியில் கும்பமாஸம் பௌர்ணமி விருஷபலக்னத்தில் ஸ்ரீகரமென்ற விமானத்தில் இங்கு ப்ரத்யக்ஷமாயுள்ளார். தேவர்களும் தினம் ஸ்நானம் செய்யும் இவருடைய வராஹதீர்த்தத்தில் கசியபர் ஸ்நானம் செய்து வராஹரை ஸேவித்து தன் அபீஷ்டம் பெற்றார். **கரும்பாயிரவிநாயகர்** (ஸஹஸ்ரேக்ஷு தண்ட விநாயகர்.) வராஹதீர்த்தரின் மேல்கரையிலிருக்கிறார். இவர் அபீஷ்ட ஸித்தியை அளிப்பவர். கரும்பு



வியாபாரி இவருடைய சமீபத்தில் ஏராளமான கரும்புகளை வியாபாரத்திற்காக சேகரித்துவைத்திருக்கையில் லீலாவினோதமாய் இந்த விக்னராஜன் ஓர் ப்ரம்மசாரி உருவங்கொண்டு ஓர் கரும்புக்கழியை யாசிக்க அதைக்கொடுக்க வியாபாரி மறுத்ததற்கு, நீ கொடாமற்போனால் அதை நான் வாங்காமற்போகேன் என்று சொல்லி ஓர் கரும்பைத் தொட்டார். அவன் அதட்ட மற்றொரு கரும்பைத் தொட்டார். மீண்டும் அவன் அதட்டினான். இவ்வாறு இவர் ஆயிரம் கரும்புகளைத் தொட்டுவிட்டு கோயிலுக்குள் புகுந்துவிட அந்த ஆயிரம் கரும்புகளும் நீரஸமாய்ப் போயிருப்பதைக் கண்டான். ப்ரம்மசாரியாய் வந்தவர் ஸ்ரீ விக்னேசுவரர்தான் என்று நிச்சயித்து தன் அபராதத்தை மன்னிக்க ப்ரார்த்தித்து பல பூஜைகளைச் செய்தான். ஆகவே இவர் இந்நாமம் பெற்றார். **ஸ்ரீ லக்ஷ்மிநாராயணர்:-** கசியப மகாமுனி மனதால் ஓர் ஸரோவரத்தையும் ஓர் மாமரத்தையும் நிர்மாணம் செய்து அங்கு ஆயிரம் வருஷம் தவம் செய்து பகவான் கருடாரூடராய் இவர் இங்கு ப்ராதுர்பவித்தார். இவருடைய சன்னதியில் மகா யோகீசுவரரான ஸ்ரீ விஜயீந்திரஸ்வாமிகள் பிருந்தாவனமடைந்து பக்தகோடிகளுக்கு ஸர்வாபீஷ்டங்களையும் அளிக்கிறார். **ஸ்ரீ வரதராஜன்:-** மதங்கமுனிவர் தினம் மகேந்திர பர்வதத்தினின்றும் கிளம்பி காலையில் தனுஷ்கோடியில் ஸ்நானம் செய்து, மத்யான்ஹம் காஞ்சி வரதனை தரிசித்து, மாலையில் திருப்பதி வெங்கடேசனை தரிசித்து இரவில் மகேந்திரபர்வதம் போய்வந்தார். இவ்வாறு ஆயிரம் வருடம் பகவத் ஸேவை செய்துகொண்டிருக்கையில் காவேரியில் இங்கு மத்யான்ஹஸ்நானம் செய்து புறப்படும் சமயம், பகவத் ஸங்கல்பத்தால் பலமான மழை பெய்து இவர் காஞ்சி வரதனை தரிசிக்கமுடியாமற்போகவும், அன்று சைத்ர சுத்த பௌர்ணமியானதால் கருடாரூடனான வரதனை தரிசிக்க முடியாமற்போய்விட்டதே என்று துக்கத்தால் மனம் நொந்து ப்ராணத்யாகம் செய்துகொள்ளும் தருவாயில், கஞ்சிவரதராஜன் கருடாரூடராய் ஸ்ரீதேவி பூதேவி ஸமேதராய் முப்பத்திமுக்கோடி தேவர்களுடனும் இருபத்திநான்கு மகாவாத்யங்களுடன் காவேரி வடகரையில் சம்பகவிருக்ஷத்தினடியில் இங்கு ப்ராதுர்பவித்தார். கதாயுதத்தால் ஓர் தீர்த்

த்தையும் நிர்மாணம் செய்தார். சைத்ர சுத்த பௌர்ணமியன்று கதாதீர்த்தத்தில் ஸ்நானமும் கருடாரூடனான வரதனை தரிசிப்பதும் ஸாயுஜ்யமுக்தியைத்தரும். இதனால் இந்த க்ஷேத்திரத்திற்கு தக்ஷிண காஞ்சி என்றும் பெயருண்டு. **தசாவதாரங்கள்:—** இந்த உத்தமமான க்ஷேத்ரத்தில் பகவான் பத்து தடவை மத்ஸ்யகூர்மாதி பத்து அவதாரங்களையும் எடுத்திருக்கிறார். மத்ஸ்யகூர்மாதி தசாவதார மூர்த்திகளும் கடைத்தெருவில் ஸ்ரீசாநாராயணப் பெருமாள் கோயிலிலிருக்கின்றனர். **ப்ரம்மா:-**எங்குமில்லாமல் இந்த உத்தமக்ஷேத்திரத்தில் இவர் காயத்ரிதேவி ஸரஸ்வதிதேவி இவர்களுடன் கோயில்கொண்டிருக்கிறார். கூடவே வேதநாராயணரும் யோகநரசிம்மருமிருக்கின்றனர். இவரால் அரசலாற்றில் பிரம்மதீர்த்தமும் நிர்மாணம் செய்யப்பட்டிருக்கிறது. தனக்கு ஜகத் சிருஷ்டிசெய்யும் சக்தி எற்பட இவர் இங்கு சாரங்கபாணியைக்குறித்து நூறு ஆயிரம், வருஷம் தபஸ் செய்தபின் அந்த வரனைப்பெற்று இங்கு ஓர் அம்சத்துடனிருக்கிறார்.

**ஸோமேசுவரர்** சிக்யேசரென்றும் சொல்லப்படுவார். அமிர்த கலசம் வைக்கப்பட்டிருந்த உரி இங்கு தங்கி இவர் ப்ராதுர்பவித்தார். சந்திரன் இவரெதிரில் சந்த்ரபுஷ்கரணியை நிர்மாணம் செய்து இவரை ஆராதித்து தன் உபாதியை தீர்த்துக்கொண்டான். இவருடைய சிரஸ்ஸுக்கு அலங்காரமானான். இவனால் பாதாளகங்கையும் நிர்மாணம் செய்யப்பட்டிருக்கிறது. **ஆதிவிசுவேசுவரர்.** பிரம்மாவின் பௌத்திரனான தூமகேது மகாமுனிவருக்கு மீனமாஸம் பௌர்ணமியன்று மாலதிவிருக்ஷத்தினடியில் இவர் ப்ரத்யக்ஷமானார். இவர் காசிவிசுவநாதர் இங்கு வருவதற்கு முன்பே இந்த க்ஷேத்திரத்திலிருந்ததால் ஆதிவிசுவேசுவரர் எனப் பெயர் பெற்றார். **நாகேசுவரர்** பில்வவனேசுவரரென்றும் சொல்லப்படுவார். அமிர்தகலசத்தின் மீதுள்ள வில்வம் இங்கு விழ பில்வவனமுண்டாயிற்று. பூபாரத்தைத்தாள சக்திபெற ஆதிசேஷன் இங்கு இவரை ஸ்தாபித்து ஆராதனை செய்து தன் அபீஷ்டத்தைப் பெற்றார். மகேந்திரன் இவரை ஆராதித்து அவனுடைய சரீரத்திலிருந்த ஸ்திரீசின்ஹங்களை ஸஹஸ்ரகண்களாய் மாற்றிக்கொண்டான். வாஸுகி இவரை ஆராதித்து நாகதீர்த்தம் நிர்



மாணம் செய்தான். த்வஷ்ட்ரு சாபத்தால் ஒளியிழந்த சூரியன் இவரை ஆராதித்து சூரிய புஷ்கரணியை நிர்மாணம் செய்து முன்போலானான். சித்திரை 11, 12, 13 தேதிகளில் சூரியன் கிரணம் மகா த்வாரம் வழியாய் இவரின்மீது விழுகிறது. அப்பொழுது சூரியபூஜை நடக்கிறது. **கௌதமேசுவரர்** உபவீதேசுவரரென்றும் சொல்லப்படுவார். அமிர்தகலசத்தின் மீதுள்ள யக்ஞோபவீதம் இங்குவிழ இவர் ஆவிர்பவித்தார். கௌதம மகாமுனிக்கு மகரிஷிகளால் ஏற்பட்ட கோஹத்தி தோஷம் இவரை ஆயிரம் வருடம் ஆராதித்து நீங்கியது. கௌதமரால் கௌதம தீர்த்தம் நிர்மாணம் செய்யப்பட்டிருக்கிறது. இவர் மகாமக குளத்தின் மேல்கரையிலிருக்கிறார். **பாணபுரீசுவரர்** காசியில் விசுவநாதர் எதிரில் ஸ்ரீவேதவியாஸர் ஸ்ரீஹரிதான் ஸர்வோத்தமரென்று சொல்ல அதை பரமசிவன் ஒப்புக்கொண்டும் நந்திகேசுவரர் சாபமிடவும், விசுவநாதருடைய ஆக்ஞையின் பேரில் வேதவியாஸர் இந்த க்ஷேத்திரம் வந்து பாணாஸுரனால் அர்ச்சிக்கப்பட்டு வந்த இந்த சிவனை ஆராதித்து, சுயம் ஓர் புஷ்கரணியை நிர்மாணம் செய்து அபீஷ்டசித்தி பெற்றார். **காசிவிசுவநாதர்.** கங்கை, யமுனை முதலான ஒன்பது புண்யநதிகளின் அபிமானி தேவதைகள் கைலாஸம் சென்று தங்களிடம் பாபிகள் விட்டுப்போன பாபம் தொலைய என்ன வழி என்று கேட்க இன்றே மகாமகமான தால்பாபாபரோதன தீர்த்தத்தில் விருஷபலக்னத்தில் ஸ்நானம் செய்தால் ஸமஸ்த பாபங்களும் தொலையுமென்றார். அவர்கள் தம்முடன் அவரை வரவேண்ட பரமசிவன் காசிக்ஷேத்ரம் வந்து கங்காதி ஒன்பது நதிகளையும் அழைத்துக்கொண்டு விருஷபாரூடராய் காசிவிசுவநாதர் ஸமஸ்த தேவக் கூட்டங்களுடன் இங்கு வந்தார். நவகன்னிகைகளுடன் இவர் மகாமக ஸரோவரம் வடகரையிலிருக்கிறார். **அபிமுகேசுவரர்** பலேசுவரரெனப்படுவார். அமிர்த கலசத்தின் மீதுள்ள தேங்காய் இங்கு விழ இவர் ஆவிர்பவித்தார். மகாமக தீர்த்தத்தின் கீழ்கரையில் கிழக்கு முகமாயிருந்த இவர் இம்மகாநதிகளுடன் காசிவிசுவநாதர் வரும் கோலாகலத்தைக் கேட்டு மேற்கு முகமாய் திரும்ப கங்காதிகளின் ப்ரார்த்தனையின் பேரில் தீர்த்தத்திற்கு அபிமுகமாய் மேற்கு முகமாகவே இவர்

இருக்கிறார். மங்களாம்பாள்:—கைலாஸநாதனான பரமசிவன் இங்கு தங்கிய அமிர்த கலசத்தை பாணப்ராகாரத்தால் உடைத்து அதன் மீது ஸுந்தரமான லிங்கம் செய்து சுயம் கிராதரூபியாய் பூஜித்து கும்பமாஸம் பௌர்ணமி யன்று மத்யான்ஹ காலத்தில் தேஜஸ்ஸார மென்ற விமானத்தில் கும்பேசுவரரை ஸ்தாபித்து தான் அதில் மறைந்தார். பரம சுந்தரியான பார்வதியை கைலாசத்தினின்றும் வரவழைத்து தன் வடபாரிசுவத்தில் மந்த்ரரத்ன மென்னும் விமானத்தில் எழுபத்தி இரண்டு ஆயிரம் மந்த்ரதேவதைகள் வசிக்கும் பீடத்தில் மந்த்ர பீடேசுவரி என்ற திருநாமத்துடன் ஸ்தாபித்தார். ஸமஸ்த மங்களங்களையும் பக்தர்களுக்கு அளிப்பதால் அவள் மங்கள நாயகி என்று சொல்லப்படுகிறாள். ஒவ்வொருநாளும் ஸாயங்காலத்தில் மங்கள நாயகியை தரிசிப்பதால் ஸமஸ்த அபீஷ்டங்களும் உண்டாகின்றன. விசேஷமாய் ப்ரதி சுக்ரவாரமும் அவளுடைய தரிசனம் தேவர்களுக்கும் மங்களத்தைத் தரக்கூடியது. கேரள அரசனான ஸ்வர்ணரோமனென்பவன் பூர்வ ஜன்மத்தில் ராமபத்ரனென வைசியனாய்ப் பிறந்து அவனுடைய பக்கத்து கடையில் சிவாபிஷேகத்துக்கு ஏராளமாய் வியாபாரம் செய்து கொண்டிருந்த ஸுப்ரமண்யரென்ற பிராம்மணனை வஞ்சித்து தன் சுவாதீனமாக்கி தன்னிடம் வியாபாரம் செய்யச் செய்து பொய்யான கணக்குகளைச் சொல்லி ஏராளமாய் பணத்தைப் பரித்த தோஷத்தால் அவனுடைய ராஜ்யம் சத்ருக்களால் அபகரிக்கப் பட்டுப்போகவும், சௌனகாதிகளின் உபதேசத்தால் அவர் ஆடி வெள்ளிக்கிழமை யன்று கும்பேசுவராலயத்திலுள்ள பீயூஷ தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து ஸ்ரீமங்களாம்பிகைக்கு மகோற்சவம் பாயஸ நைவேத்யாதிகளைச் செய்ய, அம்பாள் ஸ்வர்ண ரோமனுக்கு ப்ரத்யக்ஷமாகி கத்தி, தனுஸ், பாணம் இவைகளைத் தந்தாள். அதனால் சத்ரு ஸம்ஹாரம் செய்து ராஜ்யம் பெற்று கீர்த்திமந்தனென்ற ஸத்புத்ரனைப் பெற்றான். இவளுடைய சன்னதியில்தான் ஸ்ரீவிஜயீந்திரஸ்வாமிகளுக்கும் அப்பய்ய தீக்ஷிதருக்கும் வேதாந்தவிவாதம் நடைபெற்றதென்றும், ஸ்ரீவிஜயீந்திரருக்கு மங்களாம்பாள் ப்ரசன்னமாயிருந்தாளென்றும், ஸ்ரீராகவேந்திரர் கிரந்தகாலக்ஷேபம்செய்து பல டிப்பணி எழுதியதாயும் சொல்லப்படுவதுண்டு.



மகாமக ஸ்நானம்:—குரு ஸிம்ஹராசியில் இருக்கும்பொழுது சூரியன் கும்பத்திற்கு வந்த சமயம் பௌர்ணமி மகாநக்ஷத்திரங் கூடிய சுபதினத்தில் மகாமகமாகும். இம்மகாமகத்திற்கு ஒரு வருஷத்திற்கு முந்தியே காசி முதலான ஸமஸ்த க்ஷேத்திரங்களிலுள்ள ஸமஸ்த தீர்த்த தேவதைகளெல்லாம் இங்கு மகாமக நீராடும்பொருட்டு வந்துவிடுவதால் இவ்வருடத்தில் எந்த தீர்த்த யாத்திரையும் நிஷ்பலமென்று ஸ்பஷ்டமாய் சொல்லப்படுகிறதென்றால் மகாமகத்தின் மகிமையை என்னவென்று சொல்வது. முப்பத்திமுக்கோடி தேவர்களும், இங்கு கூடிவிடுகின்றனரென்று விவாகம், உபநயனம், உத்யாபனம், ஹவனம் முதலான எந்த தேவகாரியங்களும் இவ்வருடத்தில் செய்யலாகாதென்று நிஷேதிக்கப்பட்டிருப்பது இதன் பெருமையை நன்கு விளக்கும். மகாமகஸ்நானம் செய்யப்படும் இந்த ஸரோவரம் கன்யாதீர்த்தமென்றும், மாகதீர்த்தமென்றும், பாபாபநோதன தீர்த்தமென்றும், ஸுதாதீர்த்தமென்றும், பஹுதீர்த்தமென்றும் பலவாறு புராணாதிகளில் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் அஷ்டதிக்பாலர்களும் கங்காதி ஒன்பது புண்ய நதிகளும், சதுர்முகனும் தங்கள் தங்கள் பெயரில் தனித்தனி தீர்த்தங்களை நிர்மாணம் செய்திருக்கின்றனர். இதைத்தவிர நடுவில் த்ரிபுவனங்களிலுள்ள 66 கோடி தீர்த்தங்களுமிருக்கின்றன. இதன் வடகரையில் சதுர்முகனால் ப்ரதிஷ்டையடைந்த அசுவத்த விருக்ஷமிருக்கிறது. இந்த ஸரோவரத்தை ஒருதரம் ப்ரதக்ஷிணம் செய்தால் நூறு தடவை பூப்ரதக்ஷிணம் செய்த புண்யமுண்டாகிறது. ஒருதரம் நமஸ்கரித்தால் ஸமஸ்த தேவர்களையும் நமஸ்கரித்ததாகும். கங்கையில் நூறு வருஷம் த்ரிகாலம் ஸ்நானம் செய்தபலன் மகாமகஸ்நானத்தால் கிடைக்கிறது. 101 குலத்தார்களும் சத்கதியடைகின்றனர். மகாமகதினத்தன்று கங்காதிமகா நதிகள் பொங்கிவருவதை பலர் இன்றைக்கும் காண்கின்றனர். பால்ஹீகதேசத்து ராஜனான ஹேமபாஹு என்பவன் அவனுடைய பாரியாளான சுலோசனைக்குப் பிடித்திருந்த வேதாளபாதை நீங்க அவளுடன் கங்கையில் ஸங்கல்பபூர்வமாய் ஸ்நானம் செய்ய மூழ்கியவுடன் பூமிக்குள்ளேயிருந்த கங்கை மகாமக ஸரோவரத்திற்கு அன்று வந்த வேகத்தில் இவ்

விருவர்களும் ப்ரவாகத்தில் இழுக்கப்பட்டுபோய் மகாமக ஸரோவரத்திற்குள் வந்து அதனின்றும் அவர்கள் வெளிக்கிளம்பினார்கள். இதைக்கண்டு கும்பகோணத்திலுள்ளோர் பரமாச்சரியமடைந்தார்கள். காசியிலுள்ளோர் அவ்விருவர்களும் மூழ்கி இறந்துபோனார்களென்று வருத்தப்பட கார்க்ய முனிவர் ஞான திருஷ்டியால் இதன் உண்மையைச் சொல்லி ஸமாதானம் செய்தார். வேதாளபாதையினின்றும் ஸுலோசனை சொஸ்தமாகி தர்மபாஹுவென்ற வீரியவானான புத்திரனைப் பெற்றிருக்கிறாள். மகாமக ஸ்நானத்தால் ஸமஸ்த பாபங்களும் தொலைகின்றன. பிரம்மஹத்யை ஸுராபானம் ஸ்வர்ணஸ்தேயம் குருஸ்திரீகமனம் முதலிய பஞ்ச மகாபாபங்களைச் செய்தவன், ப்ராம்மணத்ரோகம், குருத்ரோகம், சிவத்ரோகம், யஜமானத்ரோகம் இவைகளைச் செய்தவன், துர்புத்தி பிடித்தவன், துஷ்டதானம் பெற்றவன், துஸ்ஸங்கம் செய்தவன், அரசமரம் வெட்டியவன், துளசிமணி திருடியவன், சிவதர்மத்தைக் கெடுத்தவன், வாபிகூபாதிகளைமூடியவன், மாப்பிள்ளை சொத்தில் ஜீவிப்பவன், பெண்ணின் சொத்தை எடுத்துக்கொண்டவன், மாதா பிதாக்களுக்கு விரோதம் செய்தவன், பித்ருச்ராத்தம் விட்டவன், சுடுகாட்டில் தக்ஷிணை வாங்கி பிழைப்பவன், ஸூதக அன்னத்தை புஜித்தவன், ஸன்யாசி அன்னத்திலேயே ஜீவிப்பவன், ஹரி நாமம் சொல்லாதவன், உப்பு, எள்ளு, வஸ்திரம் ஸாலக்ராமம், பசு, துளசி, கன்னிகை, புஸ்தகம், கோதுமை, அரிசி இவைகளை விற்பவன் முதலான பாபிஷ்டர்கள் மகாமக ஸ்நானத்தால் தக்ஷணமே பாப முக்தர்களாகின்றனர். பதிநிந்தை செய்த பாதகி பரிசுத்தமாவாள். ஸௌராஷ்டிர தேசத்து ஸத்ய சீலரின் ஸம்ஸாரம் சண்டி என்பவள் பதித்ரோகம் செய்து விபசாரியாக இருந்து தலையில் இடி விழுந்து அவள் மரணமடைய, பல குச்சித ஜன்மங்களைப் பெற்று முடிவில் ப்ரம்மேசுவர தேவாலயத்தின் வேசியாய் ஸுப்ரபை என அவள் பிறந்து ஸர்வாங்கமும் புழுக்கள் உண்டாகி அவள் மாகாமக ஸ்நானம் செய்து அந்த பாபம் நீங்கி உபாதி சொஸ்தமாகிற்று. ஹேஹய ராஜன் பூர்வஜன்மத்தில் ஓர் வைசியனாயிருந்து அவனுடைய கடையில் பழத்தைத் தின்றதென்று ஓர் பூனையை அடிக்க அது இறந்து போகவும் அந்த



தோஷத்தால் அவனுக்கு புத்ர பாக்ய மேற்படாமல் போக, சாகல்ய மகாமுனிவரின் உபதேசத்தால் மகாமக ஸ்நானம் செய்து ரத்னகசிதமான பூனையை தானம் செய்து கார்த்தவீரியார்ஜுனன் முதலான ஸத் புத்ரர்களைப்பெற்றான். தாம்பரபரணி நதிக்கரையிலுள்ள ஸுதர்மனென்ற ப்ராம்மணனுக்கு ஐந்து பாரியைகளும் கடைசி பாரியாளிடம் பிறந்த 18 குமாரர்களும், ஒரு கன்னிகையும் இறந்துபோய் அவன் வருந்த, குசிகரின் உபதேசத்தால் மகாமகஸ்நானம் செய்து ஜீவந்தமான பாரியாளையும் அவளிடம் ஸத்ஸந்தானத்தையும் பெற்று இதன் கரையில் கன்னிகாதானமும் செய்து நற்கதியடைந்தான். கலிங்கதேசத்து வீரவர்மராஜன் ஜன்மாந்தரத்தில் நாகங்கள் அடித்த கல்லுகளைப்பிளந்த தோஷத்தால் ஒரு கண், ஒரு காது, ஒரு காலுள்ள மகனைப்பெற்று துக்கப்பட்டு சாண்டில்யமுனிவரின் உபதேசத்தால் மகாமகஸ்நானம் செய்து அந்த தோஷம் நீங்கி ஸுந்தர குமாரனைப் பெற்றிருக்கிறான். கூர்மயாகம் செய்யத்துவக்கி உபவாஸமாயிருந்த மாதா பிதாக்களுக்காக மூன்று நாட்களில் கூர்மத்தைக் கொண்டுவருவதாய் ஸமுத்திரத்திற்குச்சென்ற ஞானவான் என்ற ப்ராம்மணன், ஸமுத்திரத்திலிருந்து வெளிவந்த ஓர் ஜலகன்னிகையின் வீணாகானத்தைக் கேட்டுக்கொண்டு 7 நாள் வராமல் நிற்க மாதா பிதாக்கள் உபவாஸத்தால் இறந்து போயினர். பூர்வ ஜன்மத்தில் அவன் மாட்டுக்கொட்டிலை பழுதுபார்க்காமல் அது விழுந்து அதில் கட்டியிருந்த மாடுகளழிந்துபோனதால் இவருக்கு இந்த மாத்ருஹத்தி பித்ருஹத்தி தோஷம் வந்தது. சௌனகாதிகளின் உபதேசத்தால் இவர் மகாமகஸ்நானம் செய்து அந்த பாபங்கள் நிவிருத்தியாகி முக்தியடைந்திருக்கிறார். இவ்வாறு மகாமகஸ்நானம் செய்வது எல்லா அபீஷ்டங்களைத்தருகிறது.

## மகாமகஸ்நான விதி.

மகாமக ஸ்நானம் செய்வதற்கு முந்திய இரண்டு நாட்களில் தனித்தனியே க்ஷவரம் செய்து கொண்டு தீர்த்த சிராத்தத்தை ஹிரண்யத்தாலும் மறுநாள் க்ஷேத்ரசிராத்தத்தை பார்வண விதியின் படிக்கும் செய்ய வேண்டும். மகாமக தினத்தன்று பித்ருக்களை உத்தேசித்து ஹிரண்ய சிராத்தம் தான் செய்யப்படவேண்டும். சக்தியுள்ளவர்கள் பஞ்சக்ரோசம் அஷ்டாதன ஸ்தானங்களின் யாத்ரை

யை செய்து கொண்டுதான் கும்பகோண க்ஷேத்ரத்தைப் பிரவேசிக்கவேண்டும். காவேரியில் அதிகாலையில் ஸ்நானம் செய்து ஸங்கல்பம் செய்து கொண்டு பஞ்சகவ்யப்ராசனம் செய்து கும்பகோண மகாத்மியத்தை சிரவணம் செய்து மகாமக ஸநானம் செய்ய வேண்டும். தினம் பிராம்மணர்களுக்கு ஷட்ரஸ ஸம்பன்னமான மிருஷ்டான்னத்தை அளித்து, தான் உறப்பு உவர்ப்பு புளிப்பு இல்லாததான ஆகாரத்தை உட்கொண்டு தாம்பூலம் க்ஷவரம் துஸ்ஸங்கம் முதலியவைகளை விலக்கி பக்தியுள்ளவனாய் ஜிதேந்திரியனாய் இருந்து இரவில் தரையில் படுத்துக் கொள்ள வேண்டும். இரவில் போஜனம் செய்யலாகாது. தீர்த்த சிரார்த்தத்தன்று பலஹாரத்தைத்தான் செய்ய வேண்டும். முதலில் வடகரையிலுள்ள காசிவிசுவநாதரை தரிசித்து அவருக்கு தேங்காய் உடைத்து, நெய் விளக்கு ஏற்றி, அவருடைய அனுக்ஞையைப்பெற்று, அவருடைய ஸமீபத்திலுள்ள நவகன்னிகையர்களை மஞ்சள், குங்குமம், சந்தனம், புஷ்பம், பழங்கள் இவைகளால் அவர்களின் தனித்தனியான 12 நாமங்களைச்சொல்லி அர்ச்சித்து அவர்களின் அனுக்ஞையைப் பெற்று, மகாமகஸரோவரத்திற்கு ப்ரதக்ஷிணமாய்ப்போய் வடகரையிலுள்ள அசுவத்த ப்ரதக்ஷிணம் செய்து தீர்த்தாபிமானி தேவர்களை ப்ரார்த்தித்து மேல்கரையிலுள்ள அபிமுகேசரை தரிசித்து அவருடைய அனுக்ஞையைப் பெற்று, தென்மேற்கு கோடியிலுள்ள கௌதமேசுவரரை தரிசித்து அவருடைய அனுக்ஞையைப்பெற்று, வடகரையில் பெரியதான கங்கா மண்டபத்தில் ப்ரம்மதீர்த்தக்கரையில் எழுந்தருளியிருக்கும், கும்பேசுவரரை தரிசித்து, அவருடைய அனுக்ஞையைப்பெற்று பிறகு கங்கா பூஜையை நடத்தி பக்தியுள்ளவனாய் என் குலத்தார், என் பாரியையின் குலத்தார், என் குருவின் குலத்தார், இந்த ஜன்மத்திலும், ஜன்மஜன்மாந்தரத்திலும் செய்த பாபங்களை, தீர்த்த தேவதைகளே! நிவிருத்தி செய்யுங்கள், என் மனோபீஷ்டத்தை அளியுங்கள் என்று ப்ரார்த்தித்து கும்பேசுவரர், சாரங்கபாணி, சக்ரபாணி முதலிய க்ஷேத்ர பாலர்களை ஸ்மரித்து, அஞ்சலியில் பொன் வெள்ளிமயமான புஷ்பங்களையும், மஞ்சள், குங்குமம், சந்தனம் முதலியவைகளையும், எடுத்து அவைகளை தீர்த்தத்தில் போட்டு



விட்டு, ஸ்நானம் செய்து நல்ல வஸ்திரமுடுத்து புண்ட்ராதிகளை தரித்து தேவ பித்ருதர்பணாதிகளை முடித்து நவகன்னியர்களின் கோயிலுக்கு வந்து அங்கு தானாதிகளைச்செய்து, ஒன்பது ஸுவாஸினிகளுக்கும் ஒன்பது முறங்கள் தானம் செய்து, பிறகு அங்குள்ள அசுவத்த மரத்தினடியில் மகா தானங்களை எல்லாம் செய்ய வேண்டும். பூதானம், கன்யாதானம், ஸுவர்ணதானம், யக்ஞோபவீததானம், கோதானம், அசுவதானம், விருஷபதானம், அன்னதானம், பாயஸதானம், தான்யதானம், கல்பவிருக்ஷதானம், குப்ததானம், கந்ததானம், முத்து தானம், நவரத்ன தானம், மதுதானம் லவணதானம், திலதானம், மாதுலிங்கதானம், ஷோடசபலதானம் முதலியவைகளை அவரவர்களின் சக்திக்கு வஞ்சனையில்லாமல் செய்யவேண்டும். அன்று இந்நகரில் அநேகலக்ஷ ஜனங்கள் கூடுவதன் நிமித்தம் ஸ்நானம் செய்வதே சிரமமாயிருக்குமாதலால் வீட்டிற்குவந்து இவைகளைச் செய்தாலும், தீர்த்தக்கரையிலேயே இவைகளைச் செய்ததாயாகும். அவசியம் இந்த கும்பகோண மகாத்மியத்தைச் சிரவணம் செய்யவேண்டும். அன்று செய்த எந்த தானமும், அணுவளவாயினும் மேருபர்வதத்திற்கு ஸமானமாகி அனந்த புண்யங்களைத்தருகின்றது. பிறகு ஸ்ரீகும்பேசுவரர் ஸ்ரீசாரங்கபாணி முதலான க்ஷேத்ரமூர்த்திகளை தரிசித்து துஸ்ஸங்கத்தை விடுத்து யாத்ரா பலனை ஸ்ரீபாரதீரமண முக்யப்ராணாந்தர்கத க்ஷேத்ரமூர்த்தி ஸ்ரீசக்ரபாணி ஸ்ரீசாரங்கபாணி முதலானவர்களுக்கு ஸமர்ப்பிக்கவேண்டும். இத்தகைய மகாமகிமையைக்கொண்டதால்தான் கும்பகோண க்ஷேத்ர மஹிமையைச்சொல்ல நாரதர் கேட்டதற்கு மெய்மறந்து ஆனந்த பாஷ்பம் பெருகவிட்டு ப்ரம்மா இதன் மகாத்மியத்தை எண்ணி எண்ணி கூத்தாடியதாய் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த கும்பகோணத்திற்கு சமானமாய் எண்ணிறைந்த சிவமூர்த்திகளுக்கும் விஷ்ணுமூர்த்திகளுக்கும் ப்ரியமானதுமான எந்த க்ஷேத்திரமுமில்லை என்று சொல்லப்படுகிறது. மகாமகத்திற்கு கும்பகோணத்திற்கு வரவோ, வந்து ஸ்நானம் செய்யவோ முடியாதவர்கள் அன்று இந்த கும்பகோண மகாத்மியத்தை சிரவணம் செய்து நவகன்னிகையர்களை ஸ்மரித்து புஷ்பாஞ்சலியை ஸமர்ப்

பித்து கும்பகோணமுள்ள திக்குக்கு நமஸ்காரம் செய்யவேண்டும். கயாக்ஷேத்ரத்தில் பஞ்சத்தில் நூறு வருடம் நித்யம் அன்னதானம் செய்யும் பலனும் 72 கோடி மந்திரங்களை ஜபித்த பலனும், ஆறு அங்கமுள்ள 4 வேதங்களை சிரவணம் செய்த பலனும், இந்த கும்பகோண மகாத்மியத்தின் சிரவணத்தால் ஏற்படுகிறதென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதை சிரவண படனம் செய்த சம்பூர்ண பலன் ஏற்பட **ஸ்ரீ** ஆதி கும்பேசுவரர், **ஸ்ரீ** சாரங்கபாணி இவர்களைப்பற்றி புராணத்திலுள்ள இரண்டு முக்யமான த்யான சுலோகங்கள் இங்கு எழுதப்பட்டிருக்கின்றன. மிக்க பெரியதான கும்பகோண மகாத்மியத்தை எமது மித்திரன் வாசகர்களுக்காக சிரமப்பட்டு வெகுவாய் சங்கிரஹித்து எழுதப்பட்டிருக்கும் இந்த அரிய கைங்கரியத்தால் கங்கா, யமுனாதி நவ கன்னிகைகளும் மற்றும் க்ஷேத்ர பாலகர்களான ஸமஸ்த பகவன் மூர்த்திகளும் மகிழ்வார்களாக.

ஸ்ரீமன் மங்களநாயகீ ஸஹசரம் கல்யாண ஸந்தோஹதம்
முக்தாமுக்த ஸுரௌக வந்தித பதத்வந்தாரவிந்தம் முதா /
த்யாயே ஸந்ததமாதி நாயகமஹம் ஸிருஷ்ட்யாதி ஸத்காரணம்
ஸ்ரீமத்திவ்ய ஸுதாகடேச்வரமஜம் க்ஷிப்ர ப்ரஸாதப்ரதம் //

த்ரிம்சத்த்ரிகோடி வஸுருத்ர திவாகராதி
தேவாதி தேவகண ஸந்ததஸேவ்யமானம் /
அம்போஜ ஸம்பவ சதுர்முககீயமானம்
வந்தே சயானமிஹ போகினி சார்ங்கபாணிம் //

ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து :

---

## விற்பனைக்குத் தயார்.

### ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சரித்திரம்.

சுமார் 80 பக்கங்களைக் கொண்டது. தேவநாகரத்திலும் தமிழிலும் ஸ்ரீராகவேந்திர ஸ்தோத்திரமும், அதன் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. காபிகள் விரைவாய் செலவடைவதால் தற்போதே பெறுவது நலம். விலை அணா 8. தபாற்கூலி அணா 2. ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம், அதன் தமிழ் திருத்தம் அணா 2. கும்பகோண மகாத்மியம் (தமிழ்) அணா 4.

மாத்வமித்திரன் ஆபீசு, கும்பகோணம்.



கும்பகோணம் கா.பே. ஸ்ரீனிவாஸாசாரியார் B.A., எழுதுவதாவது:—

## ஜயதீர்த்தாதிகள் தேவாம்சமே.

சென்ற 11-1-33உ மாத்வமித்திரனில் செய்தித்திரட்டு தலைப்பின் கீழ் ஜயதீர்த்தர் முதலியவர்களின் தேவாம்சர்களல்லவென்ற விஷயவிசாரம் செய்ததைக் கண்ணுற்றேன். "உச்சை ருத்கோஷ்யஜேதவ்யம்" உரக்கக்கூவி காரியத்தை சாதித்துக்கொள்ள வேண்டுமென்ற நியாயத்தை அனுஸரித்து அந்த பண்டிதர்கள் அர்த்தமில்லாத கடோர மொழிகளை உபயோகித்திருக்கிறார்களென்று எண்ணுகிறேன். ஜயதீர்த்த விஜயம் முதலியவைகளை கிழித்து குப்பைத்தொட்டியில் போடவேண்டுமாம். ஏனோ? ஜயதீர்த்த விஜயத்தில் நம்பிக்கையில்லையென்றால் மத்வ விஜயத்தையும் நம்பவேண்டாமே. தாத்பரிய நிர்ணயம் 32-வது அத்யாயத்தில் இந்திராதி தேவர்களுக்கு கலியுகத்தில் பிறப்பில்லையென்பதற்கு ஸ்பஷ்ட வாக்யங்கள் கிடையவேகிடையாது. மேலும் அதில் ராமாவதாரம் கிருஷ்ணாவதாரம் முதலான காலங்களில் பிறப்பெடுத்த தேவாதிகள் இன்னின்ன ஸாம்ச ஜீவர்களென்று அறிவிக்கப்பட்டிருக்கிறதேயல்லாமல் இவர்களைத்தவிர வேறு ஸாம்ச ஜீவர்களில்லை என்றாவது அவர்களுக்கு யுகாந்தரத்தில் விஜயம் லீலை முதலியவை இல்லையென்றாவது ஸ்ரீபகவத்பாதாளால் நிஷேதிக்கப்படவில்லை. ஜயதீர்த்த விஜயம் முதலிய சரித்திர கிரந்தங்களை ஒப்புக்கொள்ளாமலிருப்பதற்கு பலிஷ்டமான சரியான காரணங்களை இந்த புதிய அபிப்பிராயங்களை அடையப்பெற்ற இந்த வித்வான்கள் எடுத்துச்சொல்லி அவை அபிரமாணமென்று நிரூபிக்காதவரை அவைகள் ஸ்பஷ்டமான முக்யப்ரமாணங்கள்தானாகும். ஜயதீர்த்தரின் விஜயம் **ஸ்ரீ**வியாஸதீர்த்தராலும், **ஸ்ரீ** சங்கர்ஷணாசாரியாரென்றவராலும் தனித்தனியே சொல்லப்பட்டிருக்கிறது. இதில் ஜயதீர்த்தரின் ஸாக்ஷாத் சிஷ்யராயும் அவருக்கு ஸமகாலத்திலிருந்தவராயும் ஜயதீர்த்தரால் இவருக்கென்றே சில உபநிஷத்துக்களுக்கு டீகைகள் எழுதாமல் விட்டு இவரைக்கொண்டு எழுதச்செய்தவரும் ஜயதீர்த்தரின் மகாமகிமைகளை நேரில் கண்டுகொண்டவருமான ஸ்ரீவியாஸதீர்த்தர் செய்த ப்ராசீனமான அணுஜயதீர்த்த விஜயத்தில் **ஸ்ரீ**ஜயதீர்த்தர் இந்திராம்சமென்று கூறப்பட்டிருக்கிறது. **ஸ்ரீ**பகவத்பாதாளின் மூலகிரந்தங்களுக்கு மிக்க பிரஸித்தமான குருராஜீயமென்ற எண்ணிறைந்த டிப்பணிகளைச் செய்தவரான ஸ்ரீபாண்டுரங்கி கேசவா

சாரியார் அவர்செய்த சந்திரிகா டிப்பணியில் "மகேந்த்ரஸன்னிபஜயார்யாக்யோ பவேன்முதே" என்று எழுதியிருப்பதைக்கொண்டு ஸ்ரீ ஜயதீர்த்தர் இந்திராம்சமென்று ஸ்ரீவியாஸதீர்த்தர் முதலான ப்ராசீனர்கள் பரம்பரையாய் சொல்லிவருவதை தாம் ஒப்புக்கொண்டதை சூசித்திருக்கிறார். ஸ்ரீஜயதீர்த்தரிடம் இந்திரனுடைய அம்சமிருக்கக் கூடுமென்பதை நூதனர்களான இந்த பண்டிதர்களைவிட பண்டிதோத்தமர்களான மேற்கண்ட டிப்பணி ஆசாரியார்கள் நன்றாய் அறிந்திருக்கக் கூடுமாதலால் அவர்களின் வார்த்தையை ஏனோ நம்பலாகாது? மேலும் ஸ்ரீஜயதீர்த்தரே தம்முடைய சிஷ்யரான வியாஸதீர்த்தர் தம்மிடம் பக்தி கொண்டவர்களுக்கு தம் அம்சத்தை அறிவித்திருப்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார் என்பதை விஷ்ணு தத்வ நிர்ணய டீகையின் கடைசியில் "ஆனந்ததீர்த்த பகவத் வசஸாம் 'விசிஷ்டவ்யாக்யான கர்மணி ஸுராஹ்யதிகாரிணோத்ர" ஸ்ரீஆனந்த தீர்த்த பகவத்பாதாளுடைய வாக்யங்களுக்கு ஸம்பூர்ண வ்யாக்யானம் செய்ய தேவர்கள்தான் அதிகாரிகளென்று சொல்லியிருப்பதைக்கொண்டு நிச்சயிக்கலாம். இல்லாவிடில் ஸ்ரீஜயதீர்த்தாதி மகானுபாவர்கள் ஸ்ரீபகவத்பாதாளின் கிரந்த வ்யாக்யான விஷயத்தில் தமக்கு அதிகாரமில்லையென்றுணர்ந்து அதையும் வெளியிட்டுவிட்டு அதில் பிரவேசித்திருப்பார்களா என்ன? அவர் பிரவேசித்ததிலிருந்தே அவருக்கு அதிகாரமுண்டென்று வெட்டவெளிச்சமாகிறது. அதனால் அவர் தேவாம்சரென்று ஸித்தமாகிறது. ஆனால் அதற்கடுத்தாப்போல் "யன்மாதிருசோபி யததே ததீவஹாஸ்யம்" என்னைப் போலொத்தவர்கள் எத்தனித்திருப்பது பரிகாஸாஸ்பதமானது என்று தனித்துச் சொல்லியிருக்கிறாரே என்றால் அவர் தன்னுடைய வணக்கத்தைக் காட்டியதாய்ச் சொல்லலாம். அத்துடன் தன்னைவிட உத்தம தேவர்களான கருட சேஷாதிகள் பிரவிருத்திக்கவேண்டிய இந்த காரியத்தில் அவர்களைவிட குறைந்தவரான இந்திராம்சமானதான் ப்ரவிருத்தித்ததைப்பற்றி குறை கூறிக்கொண்டிருக்கலாம் என்று அர்த்தம் செய்ய இடமிருக்கிறது. இதைப்போலவே சந்திரிகாசாரியாரான ஸ்ரீவியாஸராஜரையும் பிரஹ்லாதாம்சமென்றே நிச்சயிக்கலாம். அவருடைய சிஷ்யரான ஸ்ரீனிவாஸதீர்த்தர் அவரை ப்ரஹ்லாதாம்சமென்று ப்ராசீனமாய் பண்டித பரம்பரைகளால் ஒப்புக்கொள்ளப்பட்டு அநேகநூற்றாண்டுகளாய் பாராயணம் செய்யப்பட்டுவரும் ஸ்ரீவியாஸவிஜயத்தில் கூறியிருக்கிறார். மேலும் அவர் இம்மாதிரி தேவர்கள்தான் ஸ்ரீவிஷ்ணுவுக்கு ப்ரீதிகரமான காரியங்களைச்செய்ய அவருடைய ப்ரேரணையின்பேரில் பூலோகத்தில் யதிமுதலான ஆசிரமம் பெற்று தம்தம்



அம்சங்களுடன் பிறக்கின்றனர். இதில் சந்தேகமில்லையென்று "அஹோ ஸுரா ஏவ புவிப்ராஜாதா ஸ்வாம்சேன யத்யாதி வராச்ரமேஷு| குர்வந்தி விஷ்ணோ ப்ரியகர்மஜாதம் தத்ப்ரேரணா தேவ நசம்சயோத்ர" என்று ஸ்பஷ்டமாய் இதரர்களுக்கு ஸந்தேகமேற்படாமலிருக்க கூறியிருக்கிறார். மேலும் "ஓம் நசாதிகாரிகமத பதனானுமானத்ததயோகாத் ஓம்" என்று உத்தமர்களுக்கு நீசபதவியையும் நீசர்களுக்கு உத்தமபதவியையும் கொடுப்பது நரகத்திற்கு காரணமென்று ஸ்ரீவேதவியாஸர் ப்ரம்மஸூத்திரத்தில் எச்சரித்திருப்பதை நன்குணர்ந்த ஸ்ரீவியாஸதீர்த்தர் ஸ்ரீனிவாஸதீர்த்தர், குருராஜர் முதலிய மேற்கூறிய மகா பண்டிதர்கள் ஜயதீர்த்தர் வியாஸராஜர் இன்னின்ன அம்சம்தானென்று நிச்சயமாய் தெரிந்துகொள்ளாவிடில் இவ்வாறு ஸ்பஷ்டமாய் கூற முன்வந்திருக்கமாட்டார்களென்பது திண்ணம். மேலும் பொதுவாய் பாத்மபுராணத்திலும் "க்ஞானீமத்வோ மாதரிச்வா குஹாஸந்தம் ஜகத்பதிம்| ஹனுமத்பீம மத்வாக்யாஸ்த்ரயோ வாயு ஸுதாஇமே|| தம் மத்வம் மாருதம் ஸர்வே பரிவாரதயாஸதா | ஸம்ஸேவிதும் ஸுராபூமாவவதீர்ணாஸ்தாததாக்ஞயா| தேது தச்சிஷ்யதாமாப்ய தன்மதம் து வ்யகோஷயன்" வாயு பகவான் ஹனுமத்பீமமத்வாக்ய மூன்று அவதாரங்களை எடுத்ததாயும் க்ஞானியான மத்வாசாரியார் ஹிருதய குகையில் வசிக்கும் ஸ்ரீஹரியின் ஸர்வோத்தமத்வ ஸாதகமான மதத்தை ஸ்தாபிப்பதாயும் அவரை ஸேவிக்க அவருக்கு அடங்கி பரிவாரதேவர்கள் பூமியில் பிறப்பெடுத்து அவருடைய சிஷ்யர்களாகி அவருடைய மதத்தைப் பரவச்செய்தவரென்றும் சொல்லப்பட்டிருப்பதைக்கொண்டு ஸ்ரீபகவத் பாதாளின் கிரந்தங்களுக்கு டீகாடிப்பணிகள் செய்தவர்கள் தேவாம்சர்கள்தான் என்பதை உறுதியாக நம்ப இடமிருக்கிறது. இப்படித்தான் நம்பவேண்டுமென்பதற்கு ஸ்ரீஅப்பண்ணாசார்யார் நாம சங்கீர்த்தன ஸ்தோத்திரத்தில் சொல்லியுள்ள யுக்தி குறிப்பிடத்தக்கதாயிருக்கிறது. அவர் சொல்வதாவது:— "ததா த்ருதீயாவதாரேபி தேவா ஏவ விஷ்ணுதீர்த்தாதயோ ஜாதா: ஸந்த: ஸத் சாஸ்திர சிரவண ப்ரவசனக்ரந்தநிர்மாணாதி ரூபேண ஸ்ரீபாதராயணப்ரிய ஸ்ரீமதாசாரிய சரண நலின பரிசர்யாம் சக்ருரிதி| யதாசௌவோத்கீதேன ஹர்யுபாஸனம் கர்த்தும் ஸ்ரீமுக்யப்ராண: சுனகரூபீ பபூவ ததாதனுஸாரேண ஸர்வேபிதேவா சுனகரூபேண ஸஞ்ஜாதா இதிசாந்தோக்ய பாஷ்யே வ்யக்தம்" எப்படி முக்யப்ராணர் ஹனுமாராய் அவதரித்த காலத்தில் தேவதைகள் வானரங்களாய் பிறந்து அவருக்கு தொண்டு புரிந்தனரோ, எப்படி பீமசேனராய் பிறந்த சமயம் தேவர்கள் ராஜர்களாய்ப் பிறந்து அவருக்கு சகாயம்

செய்தனரோ அப்படித்தான் வாயுபகவான் மத்வாசாரியாராய் அவதரித்த சமயம் தேவர்கள் தான் விஷ்ணுதீர்த்தர் முதலியவர்களாய் பிறந்து மத்வ சாஸ்திர ப்ரவசனம் கிரந்த நிர்மாணாதிகளால் தொண்டு புரிந்தனரென்று ஸம்பிரதாயஸ்தர்கள் சொல்லுகின்றனர். முக்யப்ராணர் சௌவோக்தீதத்தால் ஸ்ரீஹரியின் உபாஸனையைச் செய்வதற்காகவென ஓர் நாயின் உருவை எடுத்துக்கொண்டவுடன் அதற்கனுஸரணையாய் எல்லா தேவர்களும் நாய்களாய் மாறினார்களென்று சாந்தோக்யபாஷ்யத்தில் ஸ்பஷ்டமாய் சொல்லப்பட்டிருக்கிறதல்லவாவென்று கூறுகிறார். ஆகவே இந்த திருஷ்டாந்தம் மிகவும் பொருத்தமாயிருக்கிறது. இதன்படி ஸ்ரீராகவேந்திரர் முதலான மகான்களின் தேவாம்சத்தை பண்டிதோத்தமர்கள் நிர்ணயித்து கூறினார்களென்றால் அவைகளை நம்பாமல் புறக்கணிக்க என்ன காரணம். ப்ரஹ்லாதன் தன்னுடன் படிக்கும் மாணாக்கர்களிடம் கருணைகொண்டு தான் தத்வத்தை உபதேசித்தார். “தாணுஹ கருணோ மைத்ர: மகாபாகவதோஸுர:” என்றார் சுகாசாரியார். நரஸிம்ஹனை துதிக்கும்பொழுது “சோசேனுதம் விமுகசேதஸ இந்திரியார்த்த மாயா ஸுகாயபரமுத்வஹதோ விமூடான்| ப்ராயேண சதவமுனய: ஸ்வவிமுக்தகாமா: மௌனம் சரந்தி விஜனே நபரார்த்த நிஷ்டா:| நைதான் விஹாய கிருபணா விமுமுக்ஷ ஏகோநான்யம் த்வதஸ்ய சரணம் ப்ரமதோனுபச்யே” என்றார். பகவன்! விஷய ஸுகங்களில ஈடுபட்டு சம்ஸார பாரத்தை வகிக்கும் மூடர்களைக் கண்டு எனக்கு மிகவும் வருத்தமாயிருக்கிறது. அநேகமாய் தேவர்களும் சரியே முனிவர்களும் சரியே தம்தம் முக்திவிஷயமாகத்தான் பிரயாசைப்படுகின்றனர். எனக்கோவென்றால் இந்த மேற்கூறிய ஏழைகளைவிட்டு நானொருவனே மோக்ஷஸுகமடைய விரும்பவில்லை என்றார் பிரஹ்லாதர். பிறர்களுக்கு உபகாரம் செய்வதுதான் ப்ரஹ்லாதனின் முக்யகொள்கை. ஸ்ரீராகவேந்திரர் செய்யும் பரோபகாரமோ எந்த மாத்வனாலும் நினையாமலிருக்கமுடியாது. எண்ணிறைந்த அவருடைய சரித்திரங்கள் இதை நன்கு அறிவிக்கின்றன. ஸ்பஷ்டமாய் அவர் தத்வப்பிரகாசிகாடிப்பணியில் யத்யபி தத்வப்பிரகாசிகா கூடம் சந்திரிகாத: ப்ரகாசிதம்| அபிமந்த கிருதே ஸர்வவிஷயாச கிருதிர்மம|| என்று தத்வப்ரகாசிகையின் அபிப்பிராயம் சந்திரிகையால் வெளியானாலும்கூட நான் சாமானிய கல்விபடைத்தவர்களிடம் கருணைகொண்டு அவர்களின் உதவிக்காக நான் இந்நூலை இயற்றியிருக்கிறேனென்று கூறியுள்ளார். இந்த ஆராய்ச்சிமுறையிலும் இவர் ப்ரஹ்லாதரென்று சொல்ல இடமிருக்கிறது. தவிர அவருடைய டிப்பணிகளென்ற பாடசாலைகளில் படிக்காத எந்த பண்டிதர்களுண்டு? அப்படி



படித்தும்கூட அவருடைய தேவதாம்சத்தை ஆக்ஷேபிப்பவர்கள் யார்? அப்படி யாரேனுமிருந்தால் அவர்கள் விஷயத்தில் ராக்ஷஸா: கலிமாச்ரித்ய ஜயந்தே ப்ரம்ம யோனிஷு| ப்ராம்மணானே வபாதந்தே தத்ராபி ச்ரோத்ரியான் கிருசான” ராக்ஷஸர்கள் கலியின் உதவியைக்கொண்டு ப்ராம்மணர்களாய் பிறந்து பிராம்மணர்களையே அவர்களில் வைதிகர்களையே ஹிம்சிக்கின்றனரென்ற பெரியோர்களின் பழமொழி ப்ரமாணமாகக்கொள்ளவேண்டும். இவ்வாறு நான் சொல்வது சரியா அல்லவா என்பதை மித்திரன் வாசகர்களே நிச்சயிக்கலாம். இதுவும் கலியின் ஓர் கூத்துதான். இது சம்பந்தமாய் என்னைவிட பல அறிஞர்கள் பல ஆதாரங்களை தேடி வெளியிடுவார்களென்று நம்புகிறேன்.

---

## கும்பகோண ஆலயதீர்த்த வழிகாட்டி.

கும்பகோணம் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ரோட் மார்க்கமாய் மேற்கே சென்றால் அத்தெருக்கோடியில் தென்புரத்தில் மகாமகக்குளம் அதன் வடகரையில் காசி விசுவநாதர் கோயில். அங்கு நவகன்னிகையர்களின் மண்டபம். குளத்தின் வடகரையில் அசுவத்தவிருக்ஷம். கீழ்கரையில் அபிமுகேசுவரர். தென்மேற்கு மூலையில் கௌதமேசுவரர். சமீபத்தில் கௌதமதீர்த்தம். அங்கிருந்து நேராய் தெற்கு சென்றால் ப்ரம்மன் கோயில் ஸன்னதி. கோயிலுக்குள் வேதநாராயணர், யோக நரஸிம்ஹர். தெற்கே அரசலாற்றில் ப்ரம்மதீர்த்தம். வந்தவழியே திரும்பினால் மகாமகக்குளத்தின் வடமேற்கு மூலையில் பெரிய தபாலாபீசு. மணியார்டர் அங்குதான் பெறலாம். அதன் தெற்கே இரண்டாம் தெரு நாகேசுவரன் சன்னதி. கோயிலுக்குள் நாகதீர்த்தம். அம்மன் சன்னதியில் தெருவுக்கு அப்பால் சூரியபுஷ்கரணி. நாகேசுவர தேவாலயத்தின் மகாத்வாரத்து பக்கத்து ரோட்வழியாய் வடக்கே சென்றால் இரண்டாவது தெரு சாரங்கபாணி சன்னதி. கோயிலின் பின்புரத்தில் பொற்றாமரை (ஹேமபுஷ்கரணி) குளத்தின் தென்கரையில் ஹேமரிஷியின் கோயில். குளத்துக்குள் லக்ஷ்மீதீர்த்தம். அதன் தென்கரையிலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்கு எதிரில் ஸோமேசுவரரின் ஆலயம் கோயிலுக்குள் பாதாள கங்கைக் கிணர். அம்மன் ஸன்னதி எதிரில் தெருவுக்கப்பால் அரண்மனைத்தோட்டத்திற்குள் சந்திர புஷ்கரணி. அதிலிருந்து நேராய் மேற்கே சென்றால் பெரியகடைத்தெருவு. அதன் பக்கத்துத்தெருவில் கும்பேசுவரரின் ஆலயத்தின் மகாத்வாரம். கோயிலுக்குள் பீயூஷதீர்த்

தம். கோயில் ஸன்னதி கடைத்தெருவிலிருந்து தெற்கே சென்றால் ஸ்ரீ ராமர் கோயில். ஸ்ரீராமச்சந்திரரின் எதிரில் ஹனுமார் வீணையுடன் உட்கார்ந்திருக்கிறார். ப்ரகாரத்தில் ஸப்தகாண்டம் ராமாயணத்தின் சித்திரப்படங்களும் எழுதப்பட்டிருக்கின்றன. திரும்பி நேராக வடக்குச் சென்றால் கிழக்கே திரும்பும் இரண்டாவது தெருவாகிய பெரியதெருவின் நடுவில் ஸ்ரீவியாஸராஜமடம். பாஷ்யதீபிகாசாரியார் முதலிய மூவர்களின் பிருந்தாவனங்களிருக்கின்றன. திரும்பி கடைத்தெரு வழியாய் வடக்கே சென்றால் சக்கரபாணிஸ்வாமி கோயில் தெற்கு வாசல் வரும். கோயிலின் கீழ்வாசல் பக்கத்துத்தெரு வழியாய்ச் சென்றால் கோடியில் சக்ரதீர்த்தம். அங்கு அசுவத்த விருக்ஷம். அதன் பக்கத்துத்தெருவில் கிழக்கே சென்றால் மாத்வர்களின் வசதிகள். யாகசாலைத்தெரு துவக்கத்தில் லக்ஷ்மீநாராயணர் கோயில். அங்கு திவான் பகதூர் R. ரகுநாதராயரின் பப்ளிக் லைப்ரெரி. அங்குதான் உத்தராதிமடம் ஸ்வாமிகளுக்கும் அத்வைதிகளுக்கும் 21 நாள் வாதம் நடந்து அத்வைதிகள் எழுந்தோடியது. அடுத்தாப்போல் உத்தராதிமடம். அதன் இரண்டாவது தெரு ரெட்டிராயர் அக்ரஹாரம். தெருமுனையில் மாத்வர்களின் ராத்ரி சத்திரம். அங்கு மாத்வர்களுக்கெல்லாம் இரவில் ப்ராம்மண போஜனமுண்டு. தெருக்கோடியில் ஸ்ரீ ஆஞ்சனேயர் கோயிலும், ரெட்டிராயர் சத்திரமும் மகாமண்டபமுண்டு. மாத்வர்கள் எல்லோருக்குமே மகாமகம் 10 நாட்களுக்கு ப்ராம்மண போஜனமுண்டு. அங்கு யாத்ரீகர்கள் தங்கலாம். அந்த தெருவுக்கு கிழக்கே இரண்டாம் தெரு வெங்கடராயர் அக்கிரஹாரம்; ஒருமுனையில் வெங்கடராயர் சத்திரம். அங்கு யாத்ரீகர்கள் தங்கலாம். பட்டாபிராமர், வாஸுதேவமூர்த்தி இவர்களின் தேவாலயங்களிருக்கின்றன. அதிலிருந்து வந்தவழியே திரும்பி நேரில் மேற்கே சென்றால் தெருக்கோடியிலுள்ள புதுப்பாலத்தின் வழியாய் காவேரியைத்தாண்டினால் நேரில் கீழ்புரத்தில் ஸ்ரீவாதராஜர் கோயில். அங்கு கதாதீர்த்தம். வந்தவழியே திரும்பினால் காவேரிக்கரை தெருவுக்குப் பக்கத்துத் தெருவழியாய்ச் சென்றால் சோலையப்பமுதலி அக்கிரஹாரத்தில் ஸ்ரீவிஜயீந்திரஸ்வாமிகளின் மடம். அங்கு கசியபதீர்த்தம். லக்ஷ்மீநாராயணர். ஸ்ரீவிஜயீந்திரரின் பிருந்தாவனம். தெருவில் அதன் பக்கத்து கட்டிடம் குண்டப்பா சத்திரம். அங்கு மாத்வர்கள் தங்கலாம். அந்த மடத்து சந்தில் காவேரி தீரத்தில் தோட்டக்குடி சத்திரம். அங்கு மாத்வர்கள் தங்கலாம். அந்தத்தெருக் கீழ்க்கோடியில் பாண்டுரங்க விட்டலனின் கோயில். சமீபத்தில் விட்டலமந்திரம். அங்கும் மாத்வர்கள் தங்கலாம். அந்த சோலையப்பமுதலி அக்கிரஹாரத்திற்கு தெற்கே அடுத்



தாப்போல் ரெட்டிராயர் குளம். அதன் நாற்புரத்து தெருவுகளிலும் மாத்வர்களின் வசதிகள். தென்கரைக்கு அடுத்ததெரு வியாஸராயர், அக்கிரஹாரம். தெருமுனையில் வியாஸராயர் சத்திரம் மாத்வர்களுக்கு 10 நாட்களும் போஜனமுண்டு. ஆஞ்ஜனேயர் தேவாலயம். அந்த அக்கிரஹாரத்தில் மாத்வமித்திரன் பத்திராதிபரின் வீடு அங்கு மாத்வமித்திரன் பழய வாலியங்களையும், அதன் பிரசுரங்களையும் குறைந்த விலைக்கு பெறலாம். தெருவுக்கு தெற்கு முனையில் கரும்பாயிரம் பிள்ளையார். எதிரில் வராகக்குளம். அதன் கீழ்கரையில் வராஹதேவாலயம். மேல்கரை வழியாய் தெற்கே சென்றால் கும்பேசுவர தேவாலயம். அதன் தெற்கு வீதிக்கு அடுத்தத் தெற்குத்தெரு ஸ்ரீவிஜயீந்திரஸ்வாமிகளின் மடத்துத் தெரு (ஆசாரியாள் தெரு) அங்கு லிங்காயதனை ஜயித்து அவர் அபகரித்த மடம். அதில் அவர் ப்ரதிஷ்டை செய்த கராள நரஸிம்ஹரின் ஆலயம். கும்பேசுவரரின் தெற்கு வீதிவழியாய் நேரில் மேற்கே சென்றால் பேட்டைத்தெருவில் ஆதிவிசுவநாதர் (கம்பட்ட விசுவநாதர்) கோயில். பக்கத்தில் அரசலாற்றில் வருணதீர்த்தம். திரும்பி நேராக கிழக்கே வெகுதூரம் சென்றால் பெரிய தபாலாபீசு போகும் நாகேசுவரஸ்வாமி வடக்குவீதி முனை வரும். அதற்கடுத்த நாச்சந்தியில் வடபுரம் போகும் ரஸ்தாவழியாய்ச்சென்றால் ஸாஸ்வதிபாடசாலை ப்ரம்மவித்யா கட்டிடத்திற்கு பக்கத்தில் வியாஸபுஷ்கரணி. அதற்கடுத்த இரண்டாம் தெரு பாணபுரீசுவரரின் சன்னதி.

## காடகோபநிஷத்.

**14.** அப்பேர்ப்பட்ட அனுக்ரஹத்தால் ஏற்படும் பலன் யாதென்றால் எப்பொழுது பரமாத்மாவின் பரமானுக்ரஹம் ஏற்படுகிறதோ பிறகு அவனுடைய அந்தகரணத்திலுள்ள இச்சைகளெல்லாம் விலகுகின்றன. பிறகு அந்த ஜீவன் மரணமடைவதில்லை. ஏனெனில் அவன் சுவேதத்வீபம் முதலான உத்தமமான ஸ்தலங்களில் பரமாத்மாவை அடைகிறான். **15.** அந்தகரணத்திலுள்ள எல்லா காமங்களின் பரித்யாகம் எப்பொழுதென்றால் இந்த மனுஷ்ய சரீரத்தில் அந்தகரணத்திலுள்ள அவித்யா அகங்கார கர்மங்களாகிய முடிச்சுகள் எப்பொழுது விட்டு விலகுகின்றனவோ அப்பொழுது எல்லா காமங்களும் விலகிப்போவதால் மனுஷ்யன் முக்தனாகிறான். நிஷ்காமமான கர்மம், சிரவணம், மனனம், த்யானம் இவைகளைச் செய்யவேண்டுமென்பதற்காகத்தான் சாஸ்திரத்தின் விதானம். **16.** [இவ்வாறு மோக்ஷத்திற்கு ஹேதுவான ப்ரம்மவித்தையைச்சொல்லி

கடைசி தேகத்தினின்னும் வெளிச்செல்லும்பொழுது அவசியம் முன்னாடியே எண்ணிக்கொள்ளவேண்டிய மார்க்கத்தைச் சொல்லுகிறார்.] ஹிருதயத்தில் சம்மந்தமடைந்திருக்கும் நாடிகள் நூற்றொன்று இருக்கின்றன. அவைகளில் முக்யமாயுள்ள ஓர் நாடி சிரஸ்ஸுவரை ஓடியிருக்கிறது. அந்த முக்யமான நாடியாகிய ஸுஷும்னா நாடியிலிருந்து மேலே சென்று ஞானி மோக்ஷத்தை அடைகிறான். மற்ற நூறு நாடிகள் வேறு உலகத்திற்கு போக ஸாதகங்களாக ஆகின்றன. 17. [பேதஞானம் முக்திக்குகாரணமென்று முன்பு சொல்லப்பட்டிருப்பது இங்கு விவரிக்கப்பட்டிருக்கிறது.] அந்த ப்ரேரகராயுள்ள பரமாத்மா மனுஷ்யாதி எல்லா சேதனர்களின் ஹிருதயத்தில் எப்பொழுதும் ஸுகமாகவே இருந்து வருகிறார். அந்த பரமாத்மாவை தன்னுடைய ஜீவஸ்வரூபத்தினின்றும் ஸூக்ஷ்ம திருஷ்டியால் பின்னனென்று அறியவேண்டும். எப்படி என்றால் முஞ்ஜமென்ற தர்பைப் புதரிலிருந்து இஷீகமெனப்படும் அதிலிருந்து தனிப்பட்டதான ஈரக்காகிய திருண விசேக்ஷத்தைப் பிடுங்கி எடுப்பது போலென்கிறார்.] மோக்ஷத்தை விரும்புகிறவனால் சோகமில்லாமையும் மரணமில்லாமையும் அபேக்ஷிக்கப்படுவதால் பகவான் அப்பேர்பட்டவரென்ற ஞானம் 'அவனுக்கு அவசியமென்று சொல்லப்படுகிறது.] ஜீவனிடமிருந்து பின்னரான அந்த பகவான் துக்கம் முதலான தோஷமில்லாதவர். நித்யமுக்தரானவர். அநாதி அனந்த காலம் முதற்கொண்டு ஸம்பூர்ணமான ஸ்வரூபானந்தத்தின் அனுபவமுள்ளவரென்று அறியவேண்டும். இவ்வாறு அறியவேண்டியதவசியம். இதுதான் தாத்பரியார்த்தமென்றறிவிக்க இது இரண்டுதரம் சொல்லப்பட்டது. இவ்வாறு யமதேவர் நசிகேதருக்கு இந்த ப்ரம்மவித்தையைச் சொல்லிவந்தார். 18. நசிகேதர் யமபகவானால் உபதேசம் செய்யப்பட்ட மேற்கண்ட ப்ரம்மவித்தையையும் பூராவான ப்ரத்யாஹாரம் முதலான பகவத் ஞானத்தின் உபாய ப்ரகாரங்களையும் அனுஷ்டித்து எல்லா பாபங்களும் போனவராய் பரமாத்மாவை அடைந்து மரணமில்லாதவராய் முக்தரானார். இம்மாதிரியே வேறுயார் ப்ரம்மஞானத்தை அடைவாரோ அவரும் நசிகேதரைப்போலவே ஆவார்.

இந்த காடக உபநிஷத்தின் பாஷ்யத்தின் முடிவில் ஸ்ரீபகவத்பாதாள் பகவானை ஸ்தோத்திரம் செய்வதாவது.

நமோ பகவதே தஸ்மை விஷ்ணவே ப்ரபவிஷ்ணவே |
யஸ்யாஹமாப்த ஆப்தேப்யோ யோம ஆப்ததமஸ்ஸதா ||

இரண்டாவது அத்யாயம் மூன்றாவது வல்லி ஸம்பூர்ணம்.

காடகோபநிஷத் ஸம்பூர்ணம்.

ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து:

---



ஸ்ரீமத்வாசாரியார் இயற்றிய

# ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

(பதினேழாவது அத்யாயம்.)

(காபிரைட்) முன் தொடர்ச்சி.

(ஸ்ரீமே. வே. பாகவத ரங்கநாதாசாரியாரின் மொழி பெயர்ப்பு.)

அச்யுதனை ஸ்ரீகிருஷ்ணர் கருட பகவானை அனுப்பியபிறகு ஜராஸந்தனுடன் யுத்தம் செய்ய விரும்பினான். மதுரா பட்டணத்திலிருந்த எல்லோரையும் ஸ்ரீகிருஷ்ணர் ஓர் க்ஷணத்தில் த்வாரகா பட்டணத்தில் சேர்த்து, பிறகு பாஹு யுத்தம் செய்பவராய் காலயவனனை எதிர்கொண்டு வந்தார். ஸ்ரீகிருஷ்ணர் அனந்தமான சக்தி படைத்தவராயினும் மனுஷ்யர்களுக்குச் சரியான நீதியைக் காட்டுவதற்காக தன்னுடைய ஜனங்களை கேவலம் விளையாட்டாகவே நடு கடலுக்கு கொண்டுபோய் சேர்த்தார். ஆனால் அப்படி சேர்த்தது காலயவனனின் பயத்தாலன்று. ஆதியும் அந்தமுமில்லாததான காலத்தின் ஸம்ரக்ஷணம் யாருடைய கடாக்ஷத்தால் ஏற்படுகிறதோ அப்பேர்ப்பட்ட ஸ்ரீகிருஷ்ணருக்கு யாதவர்களை ஸம்ரக்ஷிப்பது அசக்யமானதா என்ன? நான் ஆயுதம் தரிக்காமலிருந்தாலும் ஸமஸ்தமான சைனியங்களுடன் கூடிய காலயவனன் அவனுக்கு ருத்திரனுடைய வரன் இருந்தாலும் என்னிடம் யுத்தம் செய்ய சக்தனல்லனென்பதை ஸ்ரீகிருஷ்ணர் அவர் ஒருவராய் யுத்தத்திற்கு வந்ததிலிருந்து காட்டினார். நான் ஆயுதத்துடனில்லாமலிருந்தாலும் சத்ருக்களைக்கொல்ல என்னால் முடியுமென்றறிவிப்பதற்காக ஸ்ரீகிருஷ்ணர் ஓர் புதுப்பானையில் ஓர் கிருஷ்ண ஸர்பத்தைப் போட்டு பானையின் வாயை மூடி முத்திரைப்போட்டு ஓர் தூதன் மூலியமாய் காலயவனனிடமனுப்பினார். காலயவனன் அந்த பானையிலேயே ஏராளமாய் சிற்றெறும்புகளை நிறைத்து ஹே கிருஷ்ணா! என்னுடைய சைனியம் பஹுவாய் இருப்பதால் உன்னை நான் ஜயிக்கப்போகிறேனென்று, அந்த கிருஷ்ண ஸர்பத்தை சிற்றெறும்புகளால் கொல்லச் செய்ததால் காட்டி அந்த பானையை ஸ்ரீகிருஷ்ணனிடம் திருப்பி அனுப்பினான். எங்களிரு

வர்களின் வார்த்தையில் எது ஸத்யமென்பதை காட்டுகிறேனென்று ஸ்ரீகிருஷ்ணர் அந்த தூதனிடம் சொல்லியனுப்பி காலயவனனைக் கொல்வதற்காக அவனை எதிர்த்துச் சென்றார். ப்ரபுவான அந்த ஸ்ரீகிருஷ்ணர் தன்னுடைய புஜத்தைக்கொண்டே காலயவனனை ஜயித்து அவனுடைய எல்லா சேனாதிபதிகளையும் கொன்று அவனுடைய ஸேனையிலிருந்த யானை, குதிரை, ரதம், முதலான சொத்துக்களை தன் ஊருக்கு அனுப்பினார். சத்ரு ஸம்ஹாரம் செய்யும் ஸ்ரீகிருஷ்ணர் மகத்தான அஸ்த்ரசஸ்த்ர சமூகங்களை ப்ரயோகம் செய்யும் காலயவனனை உள்ளங்கை ப்ரஹாரத்தால் அவனுடைய உத்தமமான ரதத்தினின்றும் தள்ளினார். ஸ்ரீகிருஷ்ணர் தன்னுடைய புஜத்தாலேயே காலயவனனை அவனுடைய வாகனம், ஆயுதம் இவைகளில்லாமல் செய்து அக்ஷணமே மூர்ச்சையாய்க் கிடந்த அந்த காலயவனனை பகவான் முன்பு தேவர்கள் செய்துகொண்டிருந்த ப்ரார்த்தனையை ஞாபகப்படுத்திக் கொண்டு கொல்லாமல் விட்டார். பூர்வ காலத்தில் யுவனாச்வ ராஜனின் மகனான மாந்தாத ராஜனுக்கு பிறந்த முசுகுந்தனென்ற ராஜனுக்கு நீ வெகுகாலம் தூங்குவாய் என்று வரனை அளித்த இந்திராதி தேவோத்தமர்கள் வரனையளிப்பவர்களில் சிரேஷ்டனான நாராயணனை வரம் வேண்டினர். என்னவென்றால் இந்த முசுகுந்தன் பிரயோஜனமில்லாததாயுள்ள தூக்கமாகிற வரனை எங்களிடமிருந்து பெற்றிருக்கிறான். அந்த தூக்கம் ஸார்த்தகமாகவேண்டும். ஈசுவரனான நாராயணா! கிருஷ்ணாவதார காலத்தில் உனக்கு சத்ருவாய்ப் பிறக்கப்போகும் காலயவனனை இந்த முசுகுந்தன் கண் திறந்து பார்த்து கொளுத்தட்டுமென்று வேண்டினர். அப்படியே ஆகட்டுமென்று பகவான் நாராயணர் தேவர்களுக்குச் சொன்னார். அந்த தன்னுடைய வார்த்தையை ஸத்யமாகச் செய்துகொள்ள ஸ்ரீகிருஷ்ணர் முசுகுந்தராஜன் படுத்திருந்த குகைக்குப் புறப்பட்டார். பிறகு பிரக்ஞை வந்து காலயவனன் தரையிலிருந்து எழுந்து தன்னை கீழே தள்ளிவிட்டு ஓடிக்கொண்டிருந்த ஸ்ரீகிருஷ்ணரின் பின்னே கோபத்துடன் ஓடினான். ஸ்ரீகிருஷ்ணர் முசுகுந்தராஜனுடைய குஹைக்குள் நுழைந்து மறைவாய் நின்றார். காலயவனன் பின்னே ஓடிவந்து அங்கு படுத்



திருந்த முசுகுந்தராஜனை கிருஷ்ணரென எண்ணி காலாலுதைத்தான். முசுகுந்தராஜன் விழித்து கண்ணைத்திறந்து பார்த்தமாத்திரத்தில் அக்ஷணமே காலயவனன் சுட்டுப்போய் சாம்பலாய் போனான். நாசமற்றவரான ஸ்ரீகிருஷ்ணர் தான் நெருப்பைப் போல் காலயவனனைக்கொளுத்தினார். அந்த முசுகுந்த ராஜன் பூர்வகாலத்தில் சிவனுடைய வரத்தால் தேவர்களால் கொல்ல முடியாதவர்களான தானவர்களை விஷ்ணுவின் வரனைக்கொண்டு ஸம்ஹாரம் செய்து தேவர்களிடமிருந்து இந்த வரனை அடையப் பெற்றான். என்ன வரனென்றால் நான் வெகுநாள் நித்திரை செய்யவேண்டும். என் தூக்கத்தைக்கெடுப்பவனை நான் பார்த்த மாத்திரத்தாலேயே கொன்றுவிடவேண்டுமென்று வரன்களைப் பெற்றான். அந்த காரணத்தால்தான் முசுகுந்தராஜன் விழித்து பார்த்தமாத்திரத்தில் காலயவனன் இறந்துபோனான். காலயவனனைக்கொன்றதாலும், தேவர்களின் ப்ரஸாதத்தாலும் அந்த முசுகுந்தராஜன் அக்ஷயமான புண்யத்தை அடைந்தான். தேவர்களை ஸந்தோஷிப்பது வீணாகாது. பிறகு முசுகுந்த ராஜன் ஸ்ரீகிருஷ்ணரைப்பார்த்து உத்தமமான ஸ்தோத்திரம் செய்து ஸ்ரீகிருஷ்ணரின் ஆக்ஞையின்பேரில் தவம்செய்து மோக்ஷத்தை அடையப்பெற்றான். பிறகு ஸமர்த்தனான ஸ்ரீகிருஷ்ணர் முசுகுந்தராஜனுடைய குஹாத்வாரத்தினின்றும் வெளியே வந்து எல்லா அரசர்களுடன்கூடிய ஜராஸந்தனை பாஹுவால் ஜயித்தார். ஸ்ரீகிருஷ்ணருடைய உள்ளங்கையாலும், உள்ளங்கால்களாலும் முஷ்டிப்ரஹாரங்களாலும் மரங்களாலும் சிதறுண்டு ஜராஸந்தனின் ஸைனியத்திலுள்ளோர்கள் மடிந்தனர். ஜராஸந்தன் மூர்ச்சையடைந்து விழுந்தான். ஸால்வன், பௌண்ட்ரகன், சிசுபாலன் இவர்களுடனுள்ள எல்லா ராஜர்களையும் ஸ்ரீகிருஷ்ணர் கீழே தள்ளி ஓர் க்ஷணத்தில் துவாரகைக்குப் பறந்தார். ஸ்ரீகிருஷ்ணன் சென்றபின் ஜராஸந்தன் முதலான ராஜர்கள் பிரக்ஞை வந்து எழுந்து ருக்மணியை சிசுபாலனுக்கு விவாஹம் செய்துவைத்து ஸ்ரீகிருஷ்ணருக்கு மானபங்கம் செய்வித்து அவரை ஜயிக்க இச்சைகொண்டவர்களாய் மறுபடியும் குண்டின நகரத்திற்கு யுத்த பூமியினின்றும் புறப்பட்டுப்போயினர்.

## ருக்மணி கல்யாணம்.

ருக்மணியை சிசுபாலனுக்குக் கொடுக்கச் செய்யவேண்டுமென்ற நிச்சயத்துடன் எல்லா ராஜக்கூட்டமும் குண்டின புரத்திற்குவந்து சேர்ந்ததும், பீஷ்மகராஜன் உள்பட அந்த ராஜஸமூகம் ஸந்தோஷத்துடன் சிசுபாலனுக்கு ருக்மணியைத்தர எத்தனப்பட்டுவிட்டது. அந்த ஸமயத்தில் ஸர்வலோக ஸ்திரீ ஜனங்களின் சிரேஷ்டையான விதர்பதேசத்து ராஜனின் மகளான ருக்மணிதேவி அவளுடைய புரோகிதரின் பிள்ளையான ப்ராம்மணோத்தமரை அவரிடம் ஓர் கல்யாண பத்திரிகை எழுதிக்கொடுத்து ஸ்ரீகிருஷ்ணரின் சரணஸமீபத்திற்கு சீக்கிரமனுப்பித்தாள். ஸ்ரீகிருஷ்ணர் அந்த ப்ராம்மணருடைய வார்த்தையைக்கேட்டு அக்ஷணமே விதர்ப்பதேசத்திற்குச் சென்றார். பலராமர் எல்லா யாதவர்களுடன் சேர்ந்து ஸ்ரீகிருஷ்ணரின் பின்னே சென்றார். குண்டின நகரத்திற்கு வந்த ஸ்ரீகிருஷ்ணரைப்பாத்து எல்லா ராஜக்கூட்டமும் தனுர்பாண பாணிகளாய் கன்னிகையை பாதுகாப்பதில் எத்தனப்பட்டது. கன்யாதானத்திற்கு முன்பு துர்க்காதேவியின் தரிசினத்திற்காகவென்று சாக்கிட்டு அரண்மனையினின்றும் கால்நடையாப்ப் புறப்பட்ட ருக்மணி தேவியை எல்லா அரசர்களும் பார்க்கையில் தன்னுடைய ரதத்தில் உட்கார்த்திவைத்துக் கொண்டார். ஜராஸந்தாதிகள் கோபத்துடன் ஸ்ரீகிருஷ்ணரை எதிர்கொண்டு யுத்தம் செய்ய வந்தனர். கேசவனான ஸ்ரீகிருஷ்ணர் பாண சிரேஷ்டங்களால் அந்த அரசர்களை ஆயுதமில்லாதவர்களாய்ச் செய்துமெதுவாய்ச் சென்றார். மீண்டும் வேறு தனுஸ்ஸுகளை எடுத்துக்கொண்டு ஸ்ரீகிருஷ்ணரிடம் யுத்தத்திற்கு எத்தனப்பட்ட அந்த ஜராஸந்தாதிகளை பலசாலிகளில் சிரேஷ்டரான பலராமர் அவருடைய பலத்தால் தடுத்தார். அந்த ஸந்தர்பத்தில், பலராமரிடமிருந்த பகவானுடைய சுக்லகேசம் ஜராஸந்தனை இந்த யுத்தத்தில் ஜயிப்பதற்காக தன்னுடைய சக்தியை வெளிப்படுத்தியது. அந்த ஜராஸந்தன் பலராமருடைய கதா ப்ரஹாரத்தால் சிதறிப்போய் யுத்தத்தில் பூமியில் விழுந்தான். பலராமர் ஜராஸந்தனை ஜயிதது த்வாரகா பட்டணம் சென்றார்.

(தொடரும்.)



## செய்தித்திரட்டு.

கோயமுத்தூர் மத்வஸித்தாந்த புபுந்ஸு ஸபையின் ஆதரவில் பெங்களூர் வேதமூர்த்தி புராணபாஸ்கர R.S. சேஷகிரிராயரவர்கள் 13–1–33 முதல் பிரதிதினம் மாலையில் ஸ்ரீமத் பாகவத புராணத்தையும் மாகசுத்த ப்ரதமைமுதல் மத்வ நவராத்திரி அன்று காலை 7 மணிமுதல் ஸ்ரீமத்வ விஜயத்தையும் வெகு திறமையாய் உபன்யாஸம் செய்துவருகிறார் என்றும் இடையே மாகஸ்நான மகிமை, வாயுபுராணோக்த ஆசாரியாளின் மகிமை முதலியவைகளைச் சொல்லியும் மாயாவாதம், சண்டாள ஸம்பர்க்கம், காபி, கிராப் முதலிய இக்காலத்து நாகரீகபழக்கவழக்கங்களை கண்டித்தும் பண்டிதபாமரர்கள் கேட்டு ஆனந்திக்கும்படி உபன்யாஸம் செய்வதாயும் ஏராளமான ஜனங்கள் கூடுகின்றனரென்றும் மற்றும் அவருடைய உபன்யாஸ திறமையை சிலாகித்து ஸ்ரீமான் T. G. கோகுல சந்திரராவ் நீண்டதொரு கடிதமெழுதியிருக்கிறார்.

திருவனந்தபுரம் பிராம்மண பரஸ்பர ஸஹாய ஸங்க ஸபையின் ஆதரவில் பென்ஷன் ஹைகோர்ட்டு ஜட்ஜ் பிரம்மஸ்ரீ K.G. சேஷய்யாவின் அக்கிராஸனத்தின்கீழ் திருவனந்தபுரம் மகாராஜ ஸம்ஸ்கிருத காலேஜ் தர்க்கப்ரதான பண்டித அரண்மனை வித்வான் ஸ்ரீம.வே. தோளூர் ராகவேந்திராசாரியார் அவர்கள் அவர்ணர்களுக்கு தேவாலய ப்ரவேசம் கூடாதென்பதைப்பற்றி சுருதிஸ்மிருதி புராணாதிகளினின்றும் பல பிரமாணங்களை உதாஹரித்து வெகு அழகாய் உபன்யாஸம் செய்து ஜனங்களின் ஸம்சயங்களை போக்கினரென்று அச்சபையின் காரியதரிசி எழுதுகிறார்.

ஸ்ரீமுஷ்ணம் மாத்வ மகாஜனங்கள் மார்கசீர்ஷமாதம் முழுமையும் காலையில் வீதிகளில் மாத்வ ஸம்பிரதாய பஜனைகளை நடத்தி முடிவில் மகரஸங்கரமணத்தன்று ஸ்ரீஅம்புஜவல்லிஸமேத ஸ்ரீபூவராஹனுக்கு விவாகமஹோற்சவத்தை நடத்தி அங்குள்ள 14 தேவாலயங்களுக்கு அபிஷேகாதிகளை நடத்தினார்களென்றும் இதற்கு எல்லா வகையிலும் ஸஹாயம் செய்த மகாஜனங்கள் இம்மாதிரியே வெகு ஊக்கத்துடன் வருஷா வருஷம் நடத்த ஸ்ரீபூவராஹன் பிரேரிபிக்க தாம் ப்ரார்த்திப்பதாயும் ஸ்ரீமான் ப்ராதஸ்நானம் A. ரகோத்தமாசாரியார் எழுதுகிறார்.

ஸ்ரீவியாஸராஜமடம் ஸமஸ்தானாதிபதி ஸ்ரீ ஸ்ரீவித்யாவாரிதிதீர்த்த ஸ்வாமிகளவர்களால் சென்னை மாகாணத்திலுள்ள மடத்துக்குச்சொந்தமான சொத்துக்களை பரிபாலிக்க ஸ்ரீமான் ராவ் பகதூர் S. N. V. ராஜாசாரியாரவர்களுக்கு 10–12–32 லயன்று அதிகாரப் பத்திரம் கொடுத்

திருப்பதால் இது ஸம்மந்தமான எல்லா தகவல்களும் அவருக்கே எழுதப்படலாமென அறிவிக்கப்பட்டிருக்கிறது.

உடுபி காணூர் மடாதிபதி ஸ்ரீ ஸ்ரீஸ்வாமிகளின் எதிரில் திருவனந்தபுரம் பித்ரு விலாஸம் அரண்மனையில் அரண்மனை வித்வான் ஸ்ரீமவே. தோளூர் ராகவேந்திராசாரியார் த்ரிமதஸ்தர்கள் ஒப்புக்கொள்ளும்படியாய் ஸ்ரீவிஷ்ணு ஸர்வோத்தமத்வத்தைப்பற்றி உபன்யாஸம் செய்தாரென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீமாத்வஸபையின் ஆதரவில் இம்மாதப் 4,5 உகளில் ஸ்ரீமத்வ நவமி உற்சவம் கொண்டாடப்படுகிறதென்றும் காலையில் பஜனையுடன் ஊர்வலம், பிறகு மத்வவிஜய பாராயணம் பிறகு ஸ்ரீஹரி குரு பூஜை அலங்காரம் பிராம்மண போஜனம் மாலை 3½ மணிமுதல் 7 மணிவரை உபன்யாஸாதிகள் இரவு 8 மணிக்கு ஸ்ரீமத்வாசாரியார் சித்திரபட ஊர்வலமென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திருநெல்வேலி வீராகவபுரத்தில் ஸ்ரீஆஞ்ஜனேயர் ஆலயத்தில் ஸ்ரீமான் ரங்கணதாசாரியாரின் முயற்சியின்பேரில் மத்வநவமி உற்சவம் கொண்டாடப்பட்டதென்றும் அன்று மத்யானம் பிராம்மண போஜனமும் மாலையில் ஸ்ரீமவே கௌலகி யதுநாதாசாரியாரவர்களால் ஸ்ரீமத்வ விஜய உபன்யாஸமும் நடந்ததென்றும் திருநெல்வேலி டவுனில் சக்திருஞயகர் தெரு ஸ்ரீமதி யமுனிபாய் ஆதரவில் ஸ்ரீஆஞ்சனேயர் தேவாலயத்தில் பிராம்மண போஜனமும் மாலையில் மேளதாளத்துடன் ஸ்ரீமத்வாசாரியார் சித்திரபட ஊர்வலமும் பிறகு ஸ்ரீமவே கௌலகி யதுநாதாசாரியார் உபன்யாஸமும் நடந்ததென்றும் அவ்வூர் மகாராஷ்டிர சங்கத்தின் ஆதரவில் புதூர் ஹௌஸில் மேற்படி பண்டிதரால் த்ரிமதஸ்தர்களடங்கிய கூட்டத்தில் ஸ்ரீமத்வஸித்தாந்தத்திற்குள்ள விசேஷ ஆதாரங்களைப்பற்றி உபன்யாஸம் செய்யப்பட்டதென்றும் நமது நிரூபர் அறிவிக்கிறார்.

சென்னை மேல மாம்பலத்தில் இம்பீரியல் பாங்கு ஹெட் அக்கவுண்டெண்டு ஸ்ரீமான் D. S. ராஜாராயரவர்களின் கிருகத்தில் 5-2-33உயன்று ஸ்ரீமான் மைசூர் நரஹரிதாஸரவர்களால் மத்வநவமி உற்சவம் நடத்தப்பட்டதென்றும் காலையில் உஞ்சவிருத்தி பஜனை மத்யானம் அலங்கார பந்திகளுடன் சுமார் 200 பேர்களுக்கு ப்ராம்மண ஸந்தர்ப்பணை மாலையில் ஸ்ரீமவே. தாம்பரபர்ணி வெங்கடரமணாசாரியாரவர்களால் ஸ்ரீ பகவத்பாதாளின் சரித்திர உபன்யாசம் இரவில் ஸ்ரீதாஸரவர்களால் ஹனுமத்விலாஸ ஹரிகதாகாலக்ஷேபமும் நடத்தப்பட்டதென்று ஸ்ரீமான் K. வாஸுதேவராவ் அறிவிக்கிறார்.



கரூரைச்சேர்ந்த ஆண்டாங்கோயிலில் வழக்கப்படி ஸ்ரீமத்வ நவமி மகோற்சவம் விசேஷமாய்க் கொண்டாடப் பட்டதென்றும் இச்சமயம் ஸ்ரீவியாஸராஜமடம் ஸம்ஸ்தானாதிபதி ஸ்ரீஸ்ரீவித்யாவாதிதீர்த்தஸ்வாமிகள் விஜயம் செய்தது அவ்வூர் மாத்வர்களின் மகா பாக்யமே என்றும் சுக்ரவாரத்தன்று ஸ்ரீஆஞ்ஜனேயருக்கு காலையில் பல்லக்கு உற்சவம் இரவில் குதிரை வாகனம், மத்வ நவமி சனிவாரத்தன்று ரதோற்சவம் மத்யானம் சுமார் 1500 பேர்களுக்கு ப்ராம்மண ஸந்தர்ப்பணை இரவில் வாக்யார்த்த விசாரம் ஹரிதாஸ பஜனை, உத்தாராதனை அன்று காலையில் பல்லக்கு இரவில் புஷ்பப்பல்லக்கு முதலியவை நடந்ததென்றும் ஸ்ரீமான் நாராயணாசாரியார் அறிவிக்கிறார்.

திருச்சி ஸ்ரீமாத்வ ஸபையின் 12வது வருடத்திய மகோற்சவம் ஸ்ரீமத்வநவமி கொண்டாட்டத்துடன் நடைபெற்றதென்றும் 3உ யன்று ஆராதனையின் முக்யத்வ விஷயமாய் ஸ்ரீமவே மஞ்சகுப்பம் ரங்காசாரியாரால் உபன்யாஸம் செய்யப்பட்டதென்றும் 4உயன்று மத்வவிஜய பாராயணம் பஜனை பிராம்மண ஸந்தர்ப்பணை மாலை ஸ்ரீமவே. ஸ்ரீரங்கம் யதுநாதாசாரியாரால் ஸ்ரீமத்வ ஸித்தாந்தத்தைப்பற்றி உபன்யாஸமும் இரவு மானாமதுரை ஸ்ரீமான் ஸத்யப்ரியதாஸரவர்களால் பாரிஜாத புஷ்பாஹார ஹரிகதா காலக்ஷேபமும் 5உ யன்று திருநெல்வேலி ஸ்ரீமான் நாராயணஸ்வாமி தாஸரால் ருக்மணி கல்யாண ஹரிகதையும் நடந்ததென்றும் இவ்வுற்சவத்திற்கு ஜனங்கள் ஏராளமாய் கூடியிருந்ததென்றும் அச்சபையின் காரியதரிசி ஸ்ரீமான் C. R. ஸ்ரீனிவாஸராவ் அறிவிக்கிறார்.

## ஓர் துக்க சம்பவம்.

பம்பாய் மத்வமுனிதாஸ் பத்திரிக்கையின் ஆசிரியரான பம்பாய் டெலிகிராப் டெபுடிசூபரிண்டெண்டு ஸ்ரீமான் T. V. கிருஷ்ணஸாமி ராயரவர்களின் இரண்டாவது குமாரன் சுமார் 18 வயதுள்ளவனும் திருச்சியில் F. A. பரீக்ஷைக்கு ஆஜராக வேண்டியவனுமான T.K. வெங்கோபராவ் V.T.C. 30-1-33உயன்று திடீரென்று இறந்துபோய் அவருடைய தாய் தந்தையர்களுக்கும் ஏராளமான ஸுஹிருத்வர்க்கங்களுக்கும் விசேஷ துக்கமேற்பட்டிருப்பதை அறிந்து எமது அனுதாபத்தைக் காட்டுகிறோம்.

## மதிப்புரை.

### ஸ்ரீகும்பகோண மாகாத்மிய கதா ஸங்கிரஹம்.

பவிஷ்யோத்தர புராணத்தில் 64 அத்யாயங்களால் சொல்லப் பட்டுள்ள கும்பகோண மகாத்மியத்தின் சரித்திரத்தை அத்யாய வாரியாய் கன்னட பாஷையில் வெகுவாய் ஸங்கிரஹித்து தேவ நாகரலிபியில் அச்சிடப் பட்டிருக்கிறது. முடிவில் ஸ்ரீ ஆதி கும்பேசுவரர் ஸ்ரீசாரங்கபாணி ஸ்ரீசக்கரபாணி இவர்களின் ஸ்தோத்திரமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. மகாமகத்திற்கு முன்பு இதை வாங்கிப் படித்தால் யாத்ரீகர்களுக்கு இது மிகவும் உப யோகமானது. இதன் விலை அணு 6. மேற்கண்ட ஸ்தோத்தி ரங்கள் மட்டில் விலை அணு 1½. மகாமகம் வரையில் தபாற் கூலி இல்லை. இவை கிடைக்குமிடம் R. S. சர்மா. சிரோமணி,
14. வெங்கட்டராயர் தெரு கும்பகோணம்.

### ஸம்க்ஷேப தேவபூஜா பத்ததி.

இந்நகர் கோபால விலாஸ் புஸ்தகாலயம் ஸ்ரீமான் R. குரு ராஜா சாரியாரவர்களால் தேவநாகரலிபியில் ஸம்க்ஷேபமான தேவ தார்ச்சன பூஜா பத்ததி பிரசுரிக்கப் பட்டிருக்கிறது. அவர் முதலில் அச்சிட்டபுஸ்தகம் வெகு விஸ்தாரமாயிப்பதால் லௌ கீகர்களுக்காகவேண்டி இது அச்சிடப் பட்டிருப்பதாய் தெரிய வருகிறது. அப்புத்தகத்தின் கடைசியில் சம்க்ஷேபமான த்வாதச ஸூர்ய நமஸ்கார மந்திரங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணு 2.

---

## விசேஷ தினங்கள்.

### பால்குண மாஸம்.

| | | |
|---|---|---|
| 8—3—33 | புதவாரம் | ஏகாதசி |
| 9—3—33 | குருவாரம் | த்வாதசி, பாரணை மணி 7–46 க்குள் ஸாதனி. |
| 10—3—33 | சுக்ரவாரம் | கும்பகோணத்தில் மகாமகம். |
| 11—3—33 | சனிவாரம் | போளிப்பண்டிகை, காமதகனம். |
| 12—3—33 | பானுவாரம் | பௌர்ணமி, விஷ்ணுபஞ்சக உப. இல்லை. |
| 14—3—33 | மங்களவாரம் | ஸ்ரீவாதிராஜஸ்வாமி புண்யதினம். |
| 15—3—33 | புதவாரம் | ஸ்ரீவியாஸராஜஸ்வாமி புண்யதினம். |
| 22—3—33 | புதவாரம் | ஏகாதசி. |
| 23—3—33 | குருவாரம் | த்வாதசி பாரணை 7–45க்குள் ஸாதனி. |
| 25—3—33 | சுக்ரவாரம் | அமாவாசை; விஷ்ணுபஞ்சக உபவாஸம். |